உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பர புராணம்.

இஃது
வேதாகம சித்தாந்த சைவ சமயாசாரிய பீடமாக
விளங்குகின்ற
மதுரை
திருஞானசம்பந்தசுவாமிகள்
ஆதீனம்

## சிதம்பரசுவாமிகளால்

பலர்க்கும்
பயன்படும் பொருட்டுத்
திருத்தியருளல் வேண்டுமென்ற, சாஸ்திர விளக்கச்
சங்கத்தைச் சார்ந்த சைவ சுத்த சித்தாந்த
சபையாரவர்கள்
விண்ணப்பத்தின்படி
திருத்தப்பட்டு,

ஷை சங்கத்தைச்சார்ந்த
வித்தியானந்த அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

இராக்ஷத௵—ஆவணி௴.

உ

திருச்சிற்றம்பலம்.

இஃது

சிதம்பரம்

# இராமலிங்கப்பிள்ளையவர்கள்ால்

இயற்றிய

## நிலமண்டில– ஆசிரியப்பா.

# சிதம்பரபுராணம்

இதம்பெறத்திருத்திய

## சிதம்பரமுனிவன்

பதம்பரவியது.

செம்மலர்ச் செம்மலுந் திருத்தகு நிறத்தனும்... .........*
அம்மலர்க்கரத்திற்கம்மலர்கடவுளும்.................. ...*
படைத்திடன் மூன்றாப் பயனுறு பெருந்தொழி...... ...,..*
லடைத்திற மூன்று நடாஅய்ப்பிறங்கிய ....................*
தத்தந் தலைமையிற் றாழ்வின்றி யோங்குபு............ ..... *
சித்தந் திரமுறத் திருவருட் சார்த்திச்........................*
சின்மய வடிவிற் சிதாகாயத்திடைத்...........................*
தன்மய வின்பத் தனிநடம் புரியுங்........ ...... .........*
காரண வெண்குணா கார வகண்ட......... ..... ...........*
பூரண பராபர புனித சிற்பர...... ......... ...... ... ......*
சிவநிலை யிஃதெனத் தெளிவித் தழியா............ .. ......*
நவநிலை ஞாங்கர் நண்ணிய வநுபவத்.............. .........*
தனிச்சிவ ஞானந் தன்னை மூவாண்டிற்...... ....... ... ..... *
பனிப்பறச் சிவைமுலைப் பாலொடு மளாஅய்.......... .......*

## நிலைமண்டில ஆசிரியப்பா.

ஊட்டிட வுண்டிவ் வுலகெலாந் தழைப்ப..........*
வாட்டமி லமுத வாய்மலர் மலர்ந்து..........*
தோடுடை யெனுமறைச் சொல்லமு தளித்து..........*
நாடுடைத் தாதையை நயப்பித் தருளிப்..........*
பற்பல சைவப் பதிதொறு மணுகிச்..........*
சொற்பல பதிகச் சுருதிகள் புனைந்து..........*
பொற்றிருத் தாளமும் புதுமணிச் சிவிகையுங்..........*
கொற்றவர் புகழ்மணிக் குடையுஞ் சின்னமுஞ்..........*
சுந்தரக் காளமுஞ் சந்தநற் றிரையுஞ்..........*
சிந்தரும் வெண்மணிப் பந்தருங் காசும்..........*
பரம்பர னளிக்கப் பண்புடன் பெற்றோன்..........*
வரம்பெறு மழவன் மகட்பிணி சவட்டி..........*
மருகலில் வசியன் வலவிடந் தீர்த்து..........*
வருநெறி பற்பல மகத்துவம் புரியாக்..........*
கூடலிற் றென்னன் கூனுங் குற்றமும்..........*
வாடலி லமணர்தம் மதமும் வாழ்க்கையும்..........*
எளிதினின் முருக்கி யியல்புறு மாண்பனை..........*
யளியுறு பெண்பனை யாகக் காட்டியொண்..........*
மயிலையி னென்பினை மங்கை யாக்கியுள்..........*
அயர்வறு திருமணத் தடைந்தவர் தமக்கெலாம்..........*
பெறலருஞ் சோதிப் பேருரு வளித்திவ்..........*
வையமும் வானமு மறையுஞ் சைவமும்..........*
உய்ய வோங்கிய வொருபெருங் குரவன்..........*
ஞான சம்பந்த நாயக னருளால்..........*
ஞான சம்பந்த மெல்லா மொழித்தோன்..........*
நானுறு மென்றெணி நல்லறி வாளர்..........*
இனைவுறு குழவி யிடத்தே துறந்தார்..........*
என்னு நாலடிக் கிலக்கிய மானவன்..........*
மன்னு மாதவரெலாம் வழுத்து மருந்தவன்..........*
எல்லா வுயிர்க்கு மிதஞ்செய லன்றிப்..........*
பொல்லாமை யொன்றும் புணராப் புண்ணியன்..........*
வாய்மையு மாண்பும் வயம்பெறு மனனுந்..........*
தூய்மையுந் தெளிவுஞ் சுற்றமாக் கொண்டோன்..........*
நனவினு முலகைக் கருதாக் கருத்தினன்..........*

## நிலமண்டில ஆசிரியப்பா

நனவினிற் சுழுத்தி நண்ணிய திறத்தோன்
முப்பொருட் டிறனு முழுதுணர் முனிவன்
எப்பொருட் கண்ணு மெய்ப்பொரு ளுணர்ந்தோன்
சிவமலா தொன்றுஞ் சிந்தைவைத் தறியான்
பவமிலா நெறியே பற்றிய நிலையினன்
காமம் வெகுளி மயக்கெனுங் கரிசினை
நாமங் கெடவுள் ளவிவித்த வித்தகன்
துறவரிற் றுறவன் சுத்த மெய்ஞ் ஞானி
அறவரி னறவ னன்பரி னன்பன்
திகழ்சிவ யோகி ஜீவன் முத்தன்
புகழிகழ் வொன்றும் பொருந்தாப் புனிதன்
சிவநூன் முழுதுந் தெளிந்த சத்துவன்
பவநூன் மறந்தும் பாராத் திறலோன்
எம்போன் றவர்க்கு மின்னருள் புரிவோன்
தன்போன் றவரிலாச் சாந்த வேந்தன்
சைவம் பழுத்த தனித்தரு தங்குல
தெய்வமா மதுரைச் சிதம்பர தேவன்
புண்ணிய சிதம்பர புராணந் தன்னை
நுண்ணிய வறிவா னோக்குபு திருத்தம்
ஏர்பெற வியற்றி யாவரும் பயின்றுய்ய
பாருறு மச்சிற் பதிப்பித் தருளிய
வுதவியை நினைந்துள முவந்து முப்பொழுதும்
பகமரு ளவனருட் பதமிறைஞ் சுதுமே

திருச்சிற்றம்பலம்.

நிலமண்டில ஆசிரியப்பா - முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஆசிரியவிருத்தம்.

உலகெலாம்புகழுஞ்சிதம்பரவரலாறுயிரெலாமுணர்ந்துவீடடைவான் - அலகுறுமடற்கணெழுதுருவெழுத்தினமைவித்தவருட்பெருங்கடலே - இலகுசீர்க்கூடன்மடாலயத்தமர்ந்தவெழிற்றிருஞானசம்பந்தந் - திலகசற்குருவினருள்பெறும்பொருளேசிதம்பரமாதபோநிதியே

சிதம்பரவரலாறுலகெலாமுணரத்திரட்டிடும்போன்றவர்தமக்கும் - இதம்பெறுமழியாப்பதம்பெறவளிக்கு இன்பமேயென்றனி யன்பே - கதம்பெறுமதங்களதம்பெறப்புரிந்த கவுணியற்கினியவுட் களிப்பே - இதம்பெறுஞானமுதந்தருமதுரைச்சிதம்பரமாதபோநிதியே. ௨

சத்திறையுயிர்தான்சத்தசத்தாகுந்தடைமலமசத்திவற்றிடைநீ - இத்திறையபரநோக்கலபரநோக்கெய்துறியிறைநிறைவுறைவாய் - புத்தியீதெனவென்புத்தியைத்திருத்தும்போதசின்மய வொளிமணியே - சித்தியெண்வகையும்பெறத்தருமதுரைச்சிதம்பரமாதபோநிதியே. ௩

மறைநெறிப்பொருளுமாகமச்சிறப்பும்வகுப்பதுசிவத்தொடுமருவிக் - குறைநிறைவகலக்கூடுதலிதனைக்குறிப்பறக்குறியெனக்குறிக்கக் - கறைமிடற்றொளித்துச்சடைமுடியோடுங்காட்சிதந்தருள்செழுங்கதிரோ - சிறைமலமகற்றியருடருமதுரைச்சிதம்பரமாதபோநிதியே. ௪

ஒன்றெனிலிரண்டாங்குறுமயலதனாலொன்றெனக்குறித்ததுமொழித்தே - நின்றனையெனினீ நின்றனையறிநெறியிதென் றுணர்த்திய நிறைவே - மன்றிலானந்தவாரிவாயமுதம் வாரியுண் டெழுஞ்செழுமுகிலே - தென்றிசைக்கணிகொண்டோங்கியமதுரைச்சிதம்பரமாதபோநிதியே.................................(௫)

ஆசிரியவிருத்தம் - முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரபுராணம்.

## பாயிரம்.

### காப்பு.

[ கலிவிருத்தம். ]

வானநாடர்கண் மாதவர்நாடரு.............*
மோனஞானமுழுதுமுணர்ந்திடத்........ *
தானமேவுந்தடவிகடாசலத்...... .........*
தானைமாமுகத்தண்ணலையேத்துவாம்......*

[ அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். ]

நீர்தாங்கும்பார்தாங்குநெடுமாலுமலரயனு நிரந்துபோற்ற-வார்
தாங்குபுளகமிகுகளபமுலைமலைவனிதை மகிழ்ந்துகாணத்- தார்தாங்
குசடாமவுலிநிலவெறிப்பப்பொதுவினடத்தையங்காநிற்குஞ்-சீர்தாங்
குவேதாந்தநாதாந்தப்பரஞ்சுடரைச்சிந்தைசெய்வாம்........ (க)

உருவமொருநாலாகியுருவருவத்திருவுருவ மொன்றேயாகி -யருவ
மொருநாலாகியப்பாலாயப்பாலு மளவிடாத-பொருவிறந்தவுயிர்க
டொறும்புணராமற்புணர்ந்தருளேபொழிந்தெல்லோர்க்கும்- கருத
ரியதிருச்சிற்றம்பலத்திலகும்பேரொளியைக் கருத்துள்வைப்பாம் *

அருமறையின்சிரத்தொளியா யனந்தமாய்ப்பூரணமா யசலமாகி
யொருமுதலாயுண்மையா யுணர்வாகியானந்த வுருவமாகி - யிருமல
மற்றிருப்போர்கள் விருப்பாகிமணிமன்று ளென்றுஞானத்-திருமகி
ழநின்றருளுஞ் சிதம்பரத்தையெந்நாளுஞ் சிந்தைசெய்வாம் ... (௩)

இருபதமுந்துடியிடையுந் திகழுடையுந்தனதடமு மியம்பொற்
பூணுங் - கருவிழியுஞ்செவ்வாயும் வெண்ணகையும்பசுந்தோளுங் க
மழ்நீர்க்கையும்-பொருவருமங்கலநாணுங் கந்தரமும்புருவமும்பு
னிதன்கண்ணுந் - திருவருளுருவாமெழிற் சிவகாமசுந்தரிதாள்செ
ன்னிசேர்ப்பாம் ... ... ... ... ... ... ... ...(௪)

# பாயிரம்.

நெடியவெழுபவக்கடலை யுழக்கிவினைக்கிரிநூறி நீங்காதோங்கும்
கொடியகுணம்புலன்கரண முதலானபகைப்படையைக் குலையமோ
தி - யடியவர்தங்கருத்தெளிசூழ்ந் தாவிக்கக்கருணைமத வாறுபாயும்-ப
டிபடருந்தில்லைவனக்கற்பகக்குஞ்சரத்திருதாள்பணிதல்செய்வாம்*

விடலரியபெருந்தெய்வச் சிறைமீளமறைமுனிவர் விண்ணோர்வா
ழ - மடலவிழ்கற்பகநிழலுய சிருப்புமமருலகு மகவானெய்தக் - க
டலுகதிப்போய்ப்பிடக் கிரிவீழச்சூரனுரங் கலங்கச்செங்கை - யடலயி
லேவெய்ப்பணிகொண்ட வொருகுமரனிருசரண மகத்துள்வைப்பாம்*

புரிசடையெம்பரனருளாற் சடைமுடியுநுதல்விழியும் புயங்களு
ணான்கு - மரிசகைபிரப்புமழுமூவும் படைத்தரியகளுஞ்சுர்கடொழு
தேபோற்ற-வரியபராயானந்தச சிவஞானபோதமெழுமருநூறன்னை
ந்-தெரியவிரித்தருணந்தி தேவனருணிறைந்துவினை தீர்துமன்றே*

அருமறையினெறிவிளக்குந் திருஞானசம்பந்த ராதிமீது - மரு
வியொருகண்மிதப்பின் வந்தநாவுக்கரசர் மங்கையர் கந்-தொருவ
னமுதடியையில னொனவாண்டவாரூர ரலவாதோங்குந் - திருவரு
ள் கூர்திருவாதவூரர்பதமலர்கள் சிரத்திநின்வைப்பாம் ...... (அ)

வல்லிகொண்டற்கரிய விறைவெளியர்நப்பியிப்பா லென்றுவன்றூந்
தொல்லையமரபுடையோர் மன்றுடையாளருக்சனையாற் றாய்மை
பூண்டோர் - மல்லலகமவிழ்பு மகச்சடங்குமாமறையும் வரம்புகண்
டோர் - தில்லைமூவாயிரமா முனிவரருட்பதங்கருதிச்சிறந்துவாழ்வாம்

மோருடல் நவினையகலத் தாதையிருதாளெறிந்து முடிவிலாத-வா
ர்யிருதாளடைந்த வண்டர்புகழ்தண்டீசரகில்பேதத்தும் - வேதநெ
றிசைவநெறி வழுவாது சிறந்து னம் விளங்கா நிற்கும் - போதமுடை
யுருத்திரபல் கணத்தவர்தந்திருப்பதங்கள் போற்றிசெய்வாம்...(ய)

பதிநிலைந்தவித்திநிற்த ஆப் பரசமையவிருளகற்றிப் பரமனோம்-
பொருவருமம்பலமுங் கோபுரமுமாலயமும் பொன்மேய்ந்துண்
மைச் - சுருதியுண்மைசைவநெறி தழைத்தோங்கத்திருநீற்றுச் சோழ
னெம்று - குருமணிமாமுடிபுனைந்த குலோத்துங்கவளவனருள் கு
றித்துவாழ்வாம்.......................................................(யக)

கனகநெடுவரைச்சிகரத் திலகியசிற்றம்பலத்துக் காதல்கூர - வுண
ர்வரதமமைகானே வானந்தத்தாண்டவஞ்செய் யமலற்கன்பாய் -மண
மொழிமெய்யொருமைபெறப் பணியவல்லிக்கோருடன் மகிழ்ந்து

துசெய்யுந் - தினமுநெறிவளர்த்ததிருவகம்படிமைப்பரிசனர்தாள் சிரமேற்கொள்வாம் ........................................ (௰௨)

முற்றுமுணர்மெய்கண்டசந்ததிக்கோர்தீபமெனமுதன்மைகொண்ட - கொற்றவன்றன்குடிமருவு நூலவுமாபதிசிவன்பொற் கோயிலுண்மை - சொற்றபுராணமுமிருக்கப் பின்னுமொருவகையானுஞ் சொல்வான்புக்கேன் - மற்றவன்றன் றிருவடியின் வழிவந்தோர்க் கடியனெனும் வழக்கான்மன்னோ .......................... (௰௩)

தேவாதிதேவனருணந்திபாத்தனற்குமரன்றெளிந்துவேத - மோவாதவியாதற்குப் புகலவவன்சூதமுனிக் குரைத்ததெய்வ - மூவாறு புராணத்துட் சிதம்பரத்தின்பெருமைபல முறைமைத்தாகுந் - தாவாதபெருஞ்சைவ புராணத்தின் வந்துளது சாற்றுமீதால் .... (௰௪)

[ ஐஞ்சீரடியாசிரியவிருத்தம். ]

[ வேறு. ]

ஆற்றஞ்சான்றவு வாயிரமறையவரானுக் - கேற்றதொண்டர்கண் மறைநெறியெதுகளாயுள்ளோர் - போற்றருஞ்சிதம் பரத்திலைட்பு கழினைதிகழச் - சாற்றுவாய்வட மொழியெழிதமிழினுமெலன்றூர். ()

களங்கமற்றபொற் பொதுவின்முன்காதலாலோங்க - வளர்ந்திகழ் நீழம்பரத்தோர்நூன்மாசொழித்தலபா - லுளம்பரித்திடச் சருக்கமு மொன்பதாவகுத்து - விளங்குயாறுனை செய்தனன்விருத்தயாப்ப தனால் ...................................................... (௰௬)

மருவிலிங்கிது கூறயான்வல்லேனோபுலத்தைச் - செறுநர்கேட்டிடச் சிதம்பரபுராணமென்றருட்பேர் - நிறுவியிப்பவ நீந்தற்குநிமித்தமென்றுளம் - பெறுதுமென்பதோர் கருத்தினாற்றுணிந்தன னெரிதும் ... ... ... ... ... ... ... ... ... ... ... (௰௭)

சூழுமாகடற் புட்வியான்சுடர்முடிச்சகற்றீ - ரேழுதாறுடன் முப்பஃதிலைபந்தவாண்டெல்லைத் - தாழுமாயறிச் சடைமுடித்தனிமு தலென்றும்-பொழுமம்பலப் பெருமையைமுத்ததூற்றனன்யான் *

மொய்தவங்களான் முதிர்தவர்மொழிப்படியாய்ந்து - செய்தசெய்யுள்சேர்சிதம்பரபுராணமென்றொருக்காற் - கைதவங்களைந்தோதியசணைக்கிலா நலத்தோ - ரெய்துவன்றபேற்றெல்லையையிகைசக்கு முமெளிதோ ..... ..... ..... .... ..... .... ..... .... .. .. (௰௯)

# பாயிரம்.

தீர்த்தராமுகற் கடவுளர்செய்தகாரியம்போற் - சூத்தராடல்கண்
டிகழ்ந்ததோருவலையமெவரு - மேத்துசூதரா லிசைத்தவிப்புராண
த்தினியல்லைப் - பார்த்தியான்புகல் கின்றவிப்பரிசுமப்படியால்.()

## பாயிரம்

முற்றிற்று.

௨

சிவமயம்.

முதலாவது

# சிதம்பர மான்மியச்சருக்கம்.

(ஐஞ்சீரடியாசிரிய விருத்தம்.)

சிவபரம்பரன் றிருவடித்தாமரைமறவாத் - தவயிருந்தருள் சூத
னொருத்தரையுறநோக்கி - நவமிலங்கிய நலங்களோர்நைமிசாரணியத்- து
லவமையமொன்றிலா மாதவருரைத்தம்பேயினரால் ... ....... ...(க)

சென்றுமாமறை முகற்கலைதேர்ந் துறநற்பொருள்க - ளுள்ளதன்
மையெ தனவுணருணர்விறுலுயர்ந்தோய் - கள்ளமெல்வினை கடந்த
ருள்கருணையங்கடலே - யெள்ளலொன்றிலா யாமுனக் கியம்புவது
ண்டால் ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...(உ)

பொன்னலந்திகழ் புண்டரீகப்புரப்பெருமை - முன்னருந்தொ
கை பெறத்தவமுயற்சியாற்கேட்டோ - மின்னமும்மதன் பெருமை
கள்விரிவுறவின்பந் - துன்னுமாறுகேட்குதுமெனுமாசையோதொ
லையா ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ......(௩)

ஞானமெண்ணில வவற்றினுட்டலைமைமீக்கொண்ட - தேனலம்பு
தண் பொழிலணிதில்லையின்பெருமை - ஞானதேசிக நவிற்றிநுனய
ற்றுடன்கேட்டற்- கானபக்குவ ராகினீயருளினலருள்வாய்.....(௪)

உடலழிந்திடா வகைகடலமுதத்தையுண்டு - தொடருமாசையோ
ரெண்மதி தனக்கதோர்சோதி - விடலருந்திரு முக்கிளைப்புழுதியை
மேன்மே - லிடருமன்பினு லயின்றரெஞ்சமைதிரெய்தடிலதால்

என்றகூறலுங்குதருமெதிர்முகமலர்ந்து - நன்றுசொல்லினியி
றைபதநளினமேலன்பு - துன்றநற்றவர்க கவனருட்டுளிலாப்புகழ்
மேவின்றகாதலோ ரென்பதுபுதுமையோதிகழ்த்தின்.........(௬)

வேதநான்முக னதியாம்விண்ணவர்க்கமலன் - காதைகேட்குமால்
இடைக்குமோகனகமன்றகச்சி - சோதல்கேட்பவ சருமைநீர்விரும்
பினீருமைப்போன் - மாதவப்பெரியோரெவர்வருக்குலாக்குங்காவ்.

உரகவேந்தனு மித்தலத்தனமையைவிரித்துப் - பரகல்லரே
வரிதகின்பரிசினைத்தொகுத்து - விரதமாதவப்பெருமையீர்விளம்பு
வன்மிகவும் - வரமிகுத்தவா தரவுடன்மகிழ்ந்துகேட்டிடுவீர். (௮)

தருமதேசிகன் வாதராயணன்றனித்தெனக்கி - தருளியின்னது
கேட்குநீளன்பிலோர்க்கின்பம் - பெருகுமாறுவெண்பிறைநறுங்க
ண்ணியோற்பேணு - மொருமையில்லவர்க்கியம்பலையென்றுமூக்
ளுலாத்தான் ... ... ... ... ... ... ... ... ... ... (௯)

அன்னவாறுசொன் டருமறைக்கொழுந்திலானந்தந் - துன்று
பேரவைப் பெருமையைச்சொற்றிலனெவர்க்கு - மன்றுடீங்கிலா
தரமறைமறைமுதல்வ - னென்றுமெய்வழக் கிசைந்துளிர்க்கிசை
த்திடத்தகுமால் ... ... ... ... ... .. ... ... ... ... (௰)

வாதராயணன் சயிமினிமாமுனிக்குரைக்கும் - போதுபெற்றன
னீவிருங்கேண்மெனப்புகல - வேதகாலமீ தெவ்வி - த்திலசந்தங்
வடைவே - குதமாதவவோதெனச்சொற்றனர்முனிவர் ... ... (௰௧)

தனதுதேசிகன் றன்னையுந்தக்கவாக்கினையு - மனமிடைக்கொளா
மதிநதி வனைந்தவள்ளலையும் - கனகமன்றையு நினைந்துகட்கமலநீர்
பொழிய - வனகமெய்ப்புள கத்துடன்பரவசத்தடைந்தான். (௰௨)

ஒருமுகூர்த்தமங்கிடைவிடாதுண்மையானந்தம் - பருகிபின்புறவி
ழித்துமெய்ம்முனிவலைப்பாரா - வருள்சுரந்துலகளித்தருளரிவைபா
கனையுந் - தருமதேசிகன் றன்னையுந்தகவுடன்வணங்கா ... (௰௩)

நன்றுநல்லறி வுடையநீர்நசைமிகவளர - வின்றுகேட்டலாற் கன
கமன்றிடத்துளபெருமை - யொன்றுகாதலி னினைந்திடப்பெற்றன
னுண்மை - துன்றுதேசிகன்மொழிப்படிசொல்வலெனறறைவான்

உளங்குவிர்தரு மறைச்சிகையுணர்ந்தமெய்த்தவர்கள் - வளங்குலா
விய தவத்திருல்வாழ்வதங்கடைந்தோர் - களங்கவல்வினை நீக்கியகு
கையங்களாமேல் - விளங்குகின்றது தனைநிகர்வெதிரிகாச்சிரமம் ()

விரிபசுந்தழை விளங்கியவெதிரியென்றுரைத்தற் - குரியசெங்கனி
யிரந்தையங்கானநின்றொளிர - வரியிலங்கிய கற்பகமளவில்பன்மர
ங்க - டெரிவரும்பல பறவைமாத்திகழ்ந்திடாநிற்கும் ... ...(௰௪)

கங்கையாளுறங் கொன்றையார்காமருவல்லி - தங்கலாலுழை வி
ளங்கலாற்றவக்குழூஉச்செறிவாற் - பொங்குமாமறை யாகயப்பொ
லிவிருனெற்றிச் - செங்கணென்னத் திகழ்வுறுஞ்சிறந்தவாச்சிரமம்

மலர்ந்தசெம்மலர்ப் பலாசமுமருவிவீழ்தருபுட் - குலங்களும்
மழை விழுமெழுங்குளையளித்தொகையு - மலர்ந்தமாமலரயங்கியும
தன் பிரவியமும் - கலந்தபோதெழுங்கருங்கொடித்தாமமுங்காட்டும்

அங்கிவெட்பவர் வேடையையகற்றுமாபோலப் - பொங்குபன்மல
ர் வாசமுந்தாதுமுன்பொதிந்து - கங்கையந்துறைத் தரங்கசீகரங்க
ளுங்கலந்து - தங்குமென்னடை மாருதத்தந்துல வருமால். .(௰௯)

கங்கையந்துறை பார்க்கடலாமெயர்களிறு - தங்குமந்தரந் துதைந்
தெழுதரங்கம்வாசுகிகோட் - டங்களுகமு மதனிறையருப்புமுன்கடை
யுஞ் - செங்கண்மாறன்மேற் சுதைத்துளிதெறித்தமைசிவணும். ( )

விண்டவல்வினையுளத்துமெய் விளக்கினுள் மூனிவோர் - குணடவு
ங்கியாற் றீபமாமரப்பொலிவுமூவான் - மண்டுமுட்டறம் புளவெனு
மாரிருள்வடிவங் - கண்டறிந்தவ ரிலையவண்காதலித்தோருள். (௨௯)

கணங்கொள்மாதவர்க் கயலிடைக்காற்றிறுற்பசுமை - யிணங்குபி
ண்டியின் செம்மலரிடையிடைவீழ்ந்தாங் - குணங்குமாறுவே ளுத
வியசிலீமுயமவகை - யணங்குசெய்வதற் கஞ்சினவாடினவனைய *

சடையர்தண்டினர் குண்டிகைத்தடக்கையர்சிரை - புடையர்சீற
ளிமேலியருயிர்வருந்தாத - நடையனாம்புலப் பகைகுறாவென்ற
ருண்ஞானப் - படையமொன்னிலர் மாதவர்பதியதவ்வனமே.(௨௩)

தருப்பைகொய்பவர் சமித்துடன்கொணர்பவர்செவ்வி - மருப்
பொதிந்திடு மலரிலையெடுப்பவர்வன்னி - விருப்பின்வேட்பவ ரருச்
சனைவியப்பினர்ஞானத் - திருப்பொலிந்திட விருப்பவர்காட்சியா
ற்சிறக்கும் ... ... ... ... ... ... ... ... ... ... ... ...(௨௬)

அளிகொடேசிகரிடத்தறநூல்கேட்பவனயர்-தெளியுமாறெதிர்வி
னைவிருந்தெளிந்திடுமாறு - களிகளோவப்புண்ணியந்தழைத்திடு
வின்று-மெய்யளிகொளவ்வனந்துள்ளவர்பெருமையாருரைப்பார். (௨௫)

[எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.]

ஆதிருத்தமைம்மொழுது நல்லுசுருதன்பருவ மஞ்சியீதியாதவி
லோவம்-பேறனையசாகமொடு மூலநிறைகாய்கனிகள் பேரமிகுவாச
மல்ரும் - கூவிலைவகளெப்பருவ மெய்ம்மொழுதெறு நருள் கொழு
ம்புடன்விழுப்பமிகுமான் - மாறுபடுமைம்புலனை வென்றதவமன்
னவர்க ளங்கியுறைதெய்வவனமே ... ... ... ... ... ... (௨௬)

ஆதபமிகுங்கொடிய வெனிலிமாரிமுதலாறுபருவங்கள்புரியும்-
வேதனையயப்பிலர் விருப்பிலர்வெறுப்பிலர்விழைபயனைத்தனைப்பொ
டிசெய்தோர் - ஓதலவியக்கிலர் மலர்க்கணையுருவழுவர் போதமுற
வேதமுடிவிற் - காதல்கொடிருப்பதல தொன்றுமுணராமுனிக ணை
ம்பயினலம்பெருகுமால் ... ... ... ... ... ... ... ... (௨௭)

ஆசினியரம்பைபல ருசமுறுநற்கனியி லாறுநீகர்சாறுபெருகா-
வீசமொருபாலடைய வெழமதநாண நெடு வெள்ளமொருசார்பின்
மருவத் - தேசடையகங்கைநதி யெய்யலைசிறந்தகுகொ றேமர்புக
ழ்வாணிநதிய - மாசில்யமுனாநதியும் வந்திடைகலந்தநுறைமாறுமல
தேதுரைசெய்வாம் ... ... ... ... ... ... ... ... ... (௨௮)

கொண்டலைபழக்கியெழு தாழையிளநீர்பலவு கொக்கினுறுறுதேக்
குகனிசேர் - தண்டலைகளண்டமிலை செம்றளவுதணைமெடுநீர் தயங்கு
வவியந்துமுனிவோர் - மண்டலம்விளக்குமறை மொண்டவலிபகர்தி
யு மருந்தெனக்குறந்நுமெனவா - னண்டர்கள்பெறும்படிநினைந்தொ
றும்விருந்தெதிரளிப்பனநிகர்த்துடையவால் ... ... ... (௨௯)

தேவருராகாதியர்கள் சித்தர்பலகிம்புருடர் சேணிலவும்வாசமுடை
யோர் - யாமர்களும்வந்திலகு கங்கைநதிமூழ்கியரு ளேய்துதவமா
முனிவர்தம் - மேவருமொழுக்கமும் விழுப்பமுமதிக்கரிய மெய்த்
தவமுமொய்த்தகைமையா - லாவதுதமக்கென வொருப்படும்விருப்
பினையளித்திடுவனத்தியல்பே ... ... ... ... ... ... (௩௰)

மதங்கொடு வருங்களிறருந்தவரெதிர்ந்திடின் மகிழ்ந்தெதிர்விலங்
கிலகும்-பதங்களின்விழுந்தடனெழுந்துசமைதுன்றிய பலம்பல
கொணர்ந்தவைகொடா-விதம்பெறவரும்பணி யறிந்தனபரிந்துறை

வியன்றல மடைந்தவர்கள்தந் - தடம்புகலறங்களிலுளங்களிமிருந்த குட்டங்கவயுறங்குவனவால் ... ... ... ... ... ... ...... (௫௧)

யாகமலிசாலைதொறு மங்கலவிளக்கமென வெல்லைகளுமிர்ந்துகுறுகு நாகமுமிழ்ந்மாமணிகள் கொண்டுபலதீபமிட நண்ணியதநேனுமயயிலுந் - தோகையைவிரித்தமாவீசுசிறுகால்கொடலர் துங்கமகறயங்கிதனைநின் - றோகையொடுகேகய மெழுப்புவனகண்டவரு வப்புறுதிவப்புடையதே ... ... ... ... ... ... ... ... ... (௫௨)

ஈர்மணமாமுனிவர் கங்கையிடைமூழ்கவுடன் மூழ்கியுடனேதிவிலருந் - சிலைகள்கொடுத்தவர்கள் பின்னலுகிர்கொண்டுகிர் செய்தருளருச்சனைசெயு - நேரமதறிந்துபசு நேடியெதிரொய்துமவை நேயமுறுகன்றைவெரினிற் - பேர்வறவெடுத்தரிய சாலைதனிலுய்த்துழுவை பேதமறநீதிபெருகும் ... ... ... ... ... ... ... (௫௩)

கேழலுழவர்கெழு மணித்திரள்வெடித்துகுகிளைத்தாளயர்ந்தறெறிபின் - குழலிறைப்பரலி னேகுழுயர்மாதவர் துணைப்பதம்வருத்துவதெனுக் - காழுடையயிற்றலழகள் சந்தன நறுந்தழைகள்கைக்கொடவைமுற்றுமகல - வேழமரியாளிகள் விளக்கியவளைப்பணிவியப்பினையுரைப்பதெவனோ ... ... ... ... ... ... ... (௫௪)

இகம்பரமுணர்த்துமறையாகமமுழக்கமுமிசைத்தவழியர்ச்சனையுடன் - மகப்புரிசடங்கினொமு பேரொலியுமீரமுடன் வந்தெதிர்விருந்தெதிர்கொளு - முகம்பொலிநயப்புரையி ருர்வமுடன்மாநதியின் மூழ்குமவரோசையுமெழுந் - தகங்களகலப்புணரி யஞ்சமுழலஞ்சவகலண்டபிளைசமண்டியெழுமால் ... ... ... ... ...(௫௫)

[அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.]

தன்னிகராநெறிபடைத்த இகழ்வெதிரிகாச்சிரமந் தன்னின்முனனர் - துன்னுதுவாபரயுகத்து முடிவின்மடலவிழ்வாசத் துழாயலங்கன் - மின்னவிருந்திருமாறன் கலியாணவியாதனென விளம்புமேலோன் - பன்னெடுநாளினிதிருந்தா னிமையோருமுனிவோரும் பணிந்துபோற்ற ... ... ... ... ... .. ... ... .. ... (௫௬)

சீதமாமதிவேணி யமலனுயர்திருவருளைச் சிறப்பாலெய்தி - வேதமெலாமளவிட்டுப் பிரித்துடையகுறிப்பினால் வியாதனென்று - மேதகிலாமாதவங்கூர் வெதிரிகாச்சிரமத்திலிருந்ததனாலவ்-வாதராயணனென்னும் பெயருடையோனவன்பெருமை வழுத்தற்பாற்றோ.

பொங்குதிரைக்கடல்புடைசூழ் புடவியிடைப்பிறந்திறந்து முலையுமாக்க - டங்கண்மதியோசிறிது வாளுனுமிகுறுகியிலை சாற்றுகின்ற - விங்கிவர்களிம்முறைபா லெஞ்ஞான்றும்பரகதியி லெய்தமாட்டா-ரங்கதுகொண்டவருய்யு நெறிவேண்டியுலப்பிலாவருண்மிக்கொண்டு ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... (௩௮)

பெருக்கமிகுமொழிவேதப் பருப்பதத்திற்றிருவருளின் பெருமைதன்னு- லிருக்கியசுச் சாமமதர் வணந்திகழும்மறைநான்குமெடுத்திசைத்து - வருக்கமிகுபுராணமிதி யாசமிவைதாமைந்தாமறையாச்சேர்த்துத் - திருக்கிளரு முணர்வுடைய முனிவர்க்குப் போதித்தான்றெளிவுகூர ... ... ... ... ... ... ... ... ... ... (௩௯)

பகரிருக்குப் பயிலற்கு மிபசுவைசம் பாயனற்றாம் பர்விதேரர்க்கு - நிகழ்மொழிக்குந்திகழ்சாமஞ் சயிமினிக்குமதர்வமறை சுமந்துவுக்கு - மகமகிழவருவித்துப் புராணமிதியாசமிவை யழிவெய்திற்று - புகழ்மருவவியாசர்க்கு மிகவொழியப்புகலெலிறு புகன்றபின்னர் ..... ... ... ... ... ... ... ... ... ... ... ... (௪௰)

எத்தரியநால்வேதப் பயனளவுபடாவற்றினியல்புகளைப்-பார்த்தறியயாவோருஞ் சிற்றறிவோரெனக்கருணைப் பரவைபோலு -மாத்தவமாமுனியிறையன் றிருவருளான்மறைப்பயனின் வரம்பிற்றென்னச் - சூத்திரமாமிவிநிறுவைத் தயிஞர்பெற வருள்செய்தானுளக்கநீங்க ... .. ..... ... ... ... ... ... ... ... ...(௪௧)

பொருவரியகருமகாண்டக்காமறைமொழியிரளைபொருளினுண்மை - யருணுடையசயிமினிவமொழிந் தொனக்கேற்பிகல்ம னாருணடீசன் - கருணைபுறற்கொண்டதனை யீராறுகாண்டமாக் கருதிஞானக் - குருபரனாந்தெனாதுறைன்றி யருத்தியுடன் றெரித்தனத்தான் குணக்குன்றுமன்னோன் ... ... ... ... ... ... ... ...(௪௨)

அன்னவனுன் மொழிகருமகாண்டத்தினியல்புகளை யடைவிற்கேட்டு - நன்னலத்தறிந்தனைவரும் நற்றுச் சிறந்துளக்கியாங்கவற்று நயப்பாலங்கமன்- றன்னியமாருக்கர்க்கு தானுவாத்தவேதார்த்தர் குத்திரங்க - டன்னருளாலளித்துயிரித் துளைத்தருளிப்பின்னெவ் வசாற்றுகின்றான் ... .. ... ... ... ... .. ... ..... ... ...(௪௩)

முத்தியனைவருமடையத் தோன்றினமங்களகொண்டு முடிவிலாத - நித்தமறைகளையெல்லாம் பிறிந்துவகுத்ததனைத்தனமறு நெறியினில்லாச் - சித்தமுடைவேதியர்க்குத் திரமாதர்விடையோன் மெ

னிந்துகேட்க - வுத்தமமாம்புராணமிது யாசமிலவைதேச்சுற வுனாதி தோமன்பால் ... .... .... ... ... ... ... ... ... .. ...(சச)

கருமநெறிஞானநெறி யிவையிரண்டும்விளங்கியமெய்க் காதல் கூர - வொருமைமகிழ்சயிமினியா லெம்மானின் றாராய்ந்தீங் குறைக்கப்பெற்ற - பொருவரியசூத்திரங்க டம்மாலெம்முடைத்தோற்றம் பொலிந்ததிங்ஙன் - றருமொழிக்கோளாயமிலை நங்கருத்துச்சமாதியிலே சார்ந்ததன்றே ... ..... ... .... ... ... ... (சரு)

நீங்களுநங்கற்பனையை நீங்காமலோங்கிவளர் நெறிகளென்றுந் - தேங்குமமறைவழிதன்னை வருந்திபுமெவ்வுலகத்துஞ் சிறந்துநிற்கும் பாங்குபெறநிறுத்துமென வருள்செய்துமோனத்தின் பரிசுசார்ந்தான் - வாங்கரியதீவினையி னெறிமாற்றிமெய்ஞ்ஞான வரம்புகண்டோன் ... ... ... ... ... ... ... .... ... ... ... .. (சசா)

பின்னமொழுந்தருளுடைய சயிமினிவன்றேசிகன்றன் பெருமை நோக்கிப் - பன்னிருகாலட்டாங்க புறப்பணிந்துமகிழ்ந்திருகைப் பதுமங்கூப்பிச் - சென்னியிறைஞ்சுதலொடுக்கத் தூடனின்றுநேசமெழச் சிந்தையூறு - மின்னமிர்தநிகளையா நீபுனாத்ததெலர்ந்தோற்றமெம்மனோர்க்கே ... ... ... ... ... ... ... ... ... (சஎ)

அரந்தையிலாவறிவுடைய பெரியோர்தந்தோற்றங்க ளகிலமெங்கும் - பரந்தருள்வகைப்பொருட்டன்றேவப்படிநின்றுலகம்பொலிவுபெற்ற - வரந்திகழுன்மாணுக்க னெனநின்றுற்போதிக்குமுனைர்வாலுய்ந்தே - னிரந்தரமுநன்குடையே னுனது நினக்கொன்று நிகழ்த்தலுண்டால் ... ... ... ... ... ... ... ... ... (சஅ)

மறைமுதலாகியகலையிற் பொருளுணர்மெய்ஞ்ஞானங்கை வந்ததெங்கு - நிறைபரபசிவத்திலுணர் வுறுஞானமென்னிடத்தி னிகழ்ந்ததில்லை - குறைவகல முத்திதனைக் கூடியதெப்படிபென்னக் கூறவன்றானும் - பொறையுடையசயிமினியோ டென்னையுமந்தணத்திருத்திப் புகலுகின்றான் ... ..... ..... .... ... ... ... ... (சகூ)

மைந்தநீகேட்டவுரைபல்லுயிரின்பொருட்டன்றேவருதியார்க்குஞ் - சிந்தைமகிழ்ன்றனக்கும் வீடடையுநெறியுளதுசெய்யவெளி- யெந்தைதிருவருளுடையே னுதலாலியானறியா யாவுமில்லை - மூந்துசிவஞானமலாற் கன்மகோடிகடருமோ முடியாமுத்தி ... (ருய)

வேதமுடி வுரைப் பதுவே மெய்ஞ்ஞான மற்றையவை மிகுமஞ்ஞான - மோகனுறுமெய்ஞ்ஞான மாவதுயிர்பரமசிவத்துற்றுவா

ழ்த - ஞானருளாற்குரவனேயத்தான்மறையந்த நாடாநின்ற - போ
தமுடையவர்பெறுவ ரல்லாதோர்பெறுரொம்மாற் புகன்றதுண்மை.

அந்தணர்சூத்திரர்நீசாரிவையர்சங்கரசாதி யாயினோர்க்குங் - கந்
திருவரியக்கரிமை யவருரகர்முனிவர்முதற் கணத்தினோர்க்கும்-வெந்
திறல்கூர்புள்விலங்கு கிரிமிகிடங்களுக்கும் விளம்பவைக்குஞ் - சந்
திரசேகரனருளுண் டாமாகிற்சிவஞானந் தானுண்டாகும்...(௫௨)

அன்றியுலகக்கருமமனந்த கோடிபிறப்பிடைக்கருமமாற்றினுந்
துன்றரிதுபாகறியைச் சயிமினிவதேவதாந்தச் சொற்கேட்டார்க்கு - ந
ன்றுதிகழ்ப்பொருட்டெளிவாஞ் சிவஞானஞ்சிவனருளா னன்னின்
முத்தி - யொன்றலெளிதாதலான் மூதுணர்வாலிதற்கேற்ற வுறுதி
யோர்வாய் ... ... ... ... ... ... ... ... ... ... ... ...(௫௩)

இந்நிலையி னலன்றிக் கலையறிவினான்முத்தி யெய்தலாமோ-மன்
னுமறுபவனு னமடையுநெறியினவுதியேன் மாசொன்றில்லா - மி
ன்னவிருஞ்சடாடவிமா தவதாதமிகுஞ்சாம வேதத்தன்னிற்-றன்னி
கராமொருதகர வித்தையுளததனிலைமை சாற்றற்பாற்றே ..... (௫௪)

ஒருபிரமபுரந்தன்னி லுள்ளனிபபுண்டரிகவகத் துணர்வுக்கெய்
தா - வருளிடமாகிய நுண்பே ராகாயமுண்டஃதே யறிஞர்தம்மாற்-
கருதவிருப்புதுமதுவாதேநிவ லும்புறப்பூதககனந்தன்னின் - மருவி
யவெல்லையிலுமிகுந் தெஞ்ஞான்றுங்குறைவின்றி வயங்காநிற்கும்.

விண்ணுலகமண்ணனல்கா லிரவிமதி தாரகைமின்களாதி - யெ
ன்னுமுளதிலதெல்லைப் படும்பொருள்களெத்தனைக்கு மிருப்பா
மந்த - நுண்ணியவந்தரமெங்கு நிறைந்துமறந்தெவரறிவு நோக்கி
க்காண - நண்ணரிதாய்மூப்பிறப்புச் சோகந்தாரகந்தாக நன்று
தோங்கும் ... ... ... ... ... ... ... ... ... ... ... (௫௬)

கூறியவப்பொருளியமித் ததுவும்விரும்பியனுமொரு குறைவு
ண்டாகா - தேறலிலாண்டமெலா நிற்குநிலைதனியியற்றுந் திரமா
கு - மாறிலதுதனையுணர்ந்தோர் முத்தராயுடனென மருவியாமூப்-
பேறிதெனச்சாமமறை மொழிதகரவித்தையிது பேசுங்காலே(௫௭)

மலையகலவுணர்தரவு மரியதெனச்சயிமினியும் வனைந்தோனத்- த
லைவதிகழருந்தகர வித்தைதனை நன்குபெறத் தக்கவாழ்பா - லலையகல
வுரைத்திடவும் புன்மதியேனதலினா லடியனேற்குந் - நிலைமைதனி
லியல்பறிவி னிடைச்சிறிதுந்தெளிவுபெற நிகழ்ந்ததில்லை ... (௫௮)

புகலரியபிரமபுர மப்பிரமபுரந்தன்னிற் புண்டரீக - வகமகத்து
ணுண்ணியபே ராகாயமெனவருளா லுறையாநின்ற - திகழ்வுறுமிங்
கிவற்றியல்பு தெளிவுறநீசெப்புகெனச் சென்னிதாழ்த்தான் - முகம
லரவகமலர வாதராயணனவ்விரித்து மொழிவதானான் ... ... (௫௯)

புரிகரணந்தனைக்கடந்து நிற்றலாற்சொற்றகைய புவனத்தியார்க்
குந் - தெரிவரிதாயுண்மையாய்ச் சித்தாயானந்தமாய்த்திரியாதோங்
கற்-குரியபரிபூரணமா யிருக்கின்றபரம்பிரம முள்ளோகாணும்-பெ
ரியநலத்தாலிந்த வுடல்பிரமபுரமெனப்பேர் பெற்றதம்மா...(௬௰)

சொற்றவுடற்கமலநிக ருளக்கமலம் பிரமமுறை றொன்மைதன்
னு - ளற்றகையபுண்டரிக வகமாயிற்றந்தவக நன்னிலாரூன் - பற்
றுடலம்புரமெனப்பேர் படைத்ததுபுண்டரிகவகம் பற்றிநித்தம்-
பெற்றபிரமங்ககன வுவமையாற்ககனமெனப் பேசிற்றுமால். (௬௧)

தனைநிகராம்பேரருளே முப்பிறநிமுகத்துணைக டாங்குமென்
னு - நினைவொடுநீபல்காலும் பாவித்காலனுபவத்தி னியைந்தெய்
து- மனையதெனவுறாந்தகர வித்தையிதுவாயப்போ லண்டத்துள்ளு
மினையமுறைமையினிற்கும் காயத்தின்பரிசனைக்கிங் கிசைத்தோமி
ப்பால் ... ... ... ... ... ... ... ... ... ... ... ... (௬௨)

அண்டமதிற் பாவிக்கு முறைமைகொண்டமருள் பிரமத்சண்ட
ம். வண்டகைபவடிவதனுப்பிரமபுரமவ்வண்டவடிவிநேருர்க்குக்-கொ
ண்டவுரைப்புண்டரிகம் புலியூரொன்றருமாறகள்கூறலாலே - மெண்
டருபுண்டரிகவக மெனப்படுமப்பதியின்று மிசைப்பகேட்டி. ( )

அப்பெருஞ்சிற்றம்பலத்து ளானந்தத்தாண்டவநின்றுமாநின்ற-
மெய்ப்பொருளே நுண்ணியவந் தரமலினமடையாளம் விகாரமின்
றி - பொப்பிகந்து நிறைந்திருக்கு மம்பரத்தோ டெங்கிகவு முவ
மையெய்து - மிப்பரிசானுண்ணியவாகாயமென வேதமெல மிசை
யாநிற்கும்... ... ... ... ... ... ... .... ... ... ... ...(௬௪)

பூதவாகாயம் போற் சடமாகாதருட்சித்தாய்ப் பொலிதலாலே-
போதருமம் பரமானசபாபதியைச் சிதம்பரமென்றுலகத்தநந்தத்-
தீதகன்றசிதம்பரமெந் நாளுமிலகாநிற்குஞ் செயலாலென்று -மே
தமிலாப்பதியதற்குஞ் சிதம்பரமென் றநுணமை மெய்திற் றுமால்.()

திகழ்ந்தவருட்சிதம்பரமாந் திருச்சிற்றம்பலத்துறையுந் தேவுன்
னுலே - புகழ்ந்திடவுந்தியானத்திற் புணர்ந்திடவும் பணிந்திடவும்

பூசைசெய்து - மகிழ்ந்திடவும்பெறக்கடவ னிப்படி நீ நடத்தியே ன்மலமாயாதி - யகழ்ந்தரியபராஞான வெளிவீட்டி லடைவதற்கோ ராயமுண்டோ.......................................(௬௬)

அத்தலனிலுறையுமெவ ருந்தகரவித்தைதனை யறிந்துவந்தித்-து த்தமநன் னெறியடைந்தோ ராவரினு நிச்சயமிவ் வுடலம் பெற்ற- மெய்த்தகையபயன்பெறுவோர் யாவோரும்பணிந்திறைஞ்சு மேன் மையோர்க - ளித்தகுறு நலமுடையோ ரவர்பெருமை யெவராலு நிகழ்த்தலாமோ.......................................(௬௭)

தக்கவுடலண்டத்தி னிருவகையாய் விளங்குமெனச்சாமவேத -மி க்கபரிசாலுரைத்த வருந்தகரவித்தைதனை விளம்பினேமியாம் - மரு க்குடையகாத்திரத்திற் பாவிக்கவரிதெவர்க்குந் தானங்குறித் - துய்ந் துபெறவண்டத் தருந்தகர வித்தைதனைப் போற்றிக் காப்பாம்.

அத்தகரவித்தையென விங்குரையா நின்றது நன்னெறியாமென் று - முத்தலைவேற்கைத்தலத்து முக்கணருளானந்த முதல்வ னென் றுஞ் - சித்தவையின் ஞானநாடகங்காண்டல் பெறனென்று நேருமன் பால - வித்தகமாயுரைத்தனையா லிவ்வளவோ வின்னமு நீ விளம்ப க்கேண்மோ.......................................(௬௯)

விற்கருவும் விராட்புருடன் மனப்புண்டரீகத்து விழிமலமுமாமது மற்களமு மிலகவுமை காணுநிலையாய் நிலைய மடைந்தவானுசை - மீற் றனமாயானந்தத் திறமான தலையனுமன் செய்துமகண்டேரி - நந் தநியோமானக் கைவல்லியமறையன்பான்முனிவ நவிற்றல் காண்டி.

எதுமிலாக்கடவுளர்களெல்லார்க்குங்காரணமா யிருப்போன் தச்- சிதமாலுக்கப்பா லயிரேனன் மலர்த்தவிசிற்சிறந்தவேத -மாதவனை ப்படைத்தருளியோன் பாரெனாருமன் மலமாயை சருமநீக்கிச் - சா தல்பிறப் பிலையை யொழிக் குஞ் சிவஞானம் யாவோர்க்குந் தருவோ னென்றும்.......................................(௭௧)

உருத்தெரியாமலமிகுந்து காத்திரத்து ஞானகமா யொளிரா நின் று-திருத்தகுமெய்ம்மனத்தமலக் குட்பொலியுமட்கரனுந் திறந்திலங் கும் - வருத்தமுறும்பிறப்பிறப்பு மாமாயை கருமமும்போம்ப ருங்குசாய - வருத்தியுடன்யாவொருநாடோறும் பூசிப்பரிவ ருகந் யென்றும்....................................... (௭௨)

அருமறைகண்முதலிணமி லினின்முடிவிளைவுறவது ருத்திரனென வெ ன்று - மொருமைதிகழுண்மையறி வானந்தமேயுருவா யொப்பிலா

று - மருவருமவ்வுருத்திரனே யிறையகமலந்தன்னில் வந்தித்தேத்து
ம் - பொருவருஞானாகாயமென்று மியலியசுமறை புகன்றதன்றே.

மற்றுமுளபலமறையி னிப்பரிசுவருமிடங்கண் மதியால்மிக்கோ-
யுற்றபொரு ளிப்படியே கோடிசிதம் பரப்பெருமை யுணர்ந்துசெ
ன்று - முற்றரியகாதலுடன் சிற்சபையினர்புயங்க முயங்குகூத்தன்
றாட்டகதி ருதய நிகர் பதமலர்கண் டருண்முத்திச் சூழல்சேர்வாய்.

சுடர்பரவு சுராட்புருட னுருவக்கமல மாகியவத் தொல்லைத் தில்லை-
யிடமதனுளருவுருவச் சிற்சபையிற்சிற்கனமெவருமுய்ய - நடமரு
வுதிருவுருவோ டெதிர்நின்று கண்டோர்க்கு நாடற்கொண்ணாத்-தட
மருவுபரமுத்தி தருமெய்ம்மூலத்தலத்திற் றலங்களியாதோ... (௭௫)

சித்தநெறிதிரியாத சயிமினிவியாமுனைத்த திறங்களெல்லாஞ்-சத்
தியமேயையமில்லை வாழியெனப் பேரருளாற் சாற்றினுல் - வித்த
கநல்லறிவதரு ளளவிலாவேதங்கள்விளங்கக்கிட்டா - முதநெறியா
மியாருமடையவவதாரஞ்செய் முனிவர்கோமான்............(௭௬)

சிதம்பரமான்மியச்சருக்கம்-முற்றிற்று.

{பாயிரம் உட்பட சருக்கம் - இரண்டிக்கு
திருவிருத்தம்— ௭௬.}

திருச்சிற்றம்பலம்.

௨

திருச்சிற்றம்பலம்.

# துன்மதச்சருக்கம்.

[அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.]

மதம்பரவைபெனப்பெருக வருகாடக்கரியுரித்த வள்ளலேயிச்-சி
தம்பரமென்றறியுநெறி சயிமினிக்கு முனிபுனைத்த திறத்தினன்றே
ன் - பதம்பரவி யறிந்தவாறுனைத்திப்பாற் றுன்மதன்றன் பழநூல்
யோத - விதம்பரமெய்த் துறைமன்றிற் றாள்கண்டு வீடுற்ற விளக்கஞ்
சொல்வாம்..........................................(௧)

- குருபரனக்குறைத்தமொழி பழுதுசெவிநாவாகக் குலவுமன்பா
ற் - பருகுசயி மினியெழுமிக்கத் தூடனிறைஞ்சி மிகுஞ்சருணைப் ப

வழுத்தி - தருமரியவிருந்தகர வித்தையருள் செய்தனையென் றனக்
கோணாய - மருவியது தெளியவுணர்த் தருள்புரிதி யெனமிகவும்வழு
த்திச்சொல்வான்..........................................(௨)

அடைவுபெறு மறைப்பொருண்முன் பின்கூட்டி யாராய்ந்தவள
விலிந்த - வுடலிற்றுறப்பெறுந்தகர வித்தையொழிந் தண்டத்தி னுள்
ளதாகத் - திடமருவவென் னிதயத் துதித்ததிலை யெவ்வண்ணமெனு தெ
ளியும்வண்ணஞ் - சடைமவுலிமுனிவேந்தவருளென் றான் மெய்ம்மு
னியுஞ் சாற்றுகின்றான்..........................................(௩)

நற்றுமறைப்பொருளாய்ந்த மிகப்பெரியோய் வினவியதுற்றன்
சால - மந்தணமீதாயினுநீயென்பா லன்பினையதனுண் மகிழ்ந்துகே
ட்டி - யந்தமிலவேதங்கட் கவற்றினுறும்பொருட்டரியா வென்விலாத
விந்தவகைதெரிந்துவிரித்தளர்தவத்தி னுயர்ந்தருளே யெய்தினோர்
கள்..........................................(௪)

அண்டமுடலைத்தனக்கங்குறுபொருளென் றருமறைகளறைய
நிற்கும் - கொண்டவுடலகத்துளதென் றியாவோரும் வெளிப்பட
யாக்கூறுநிற்ப - ரண்டருமண்டத்தினது மறைந்தபொருளாயிரு
ப்ப நியாதாயென்னில் - விண்டலராமிமையோர்கண் மறைந்த
பொருண்மேல்விருப்ப மேவலாலே..........................................(௫)

மன்னியவண்டத்தினிடை யருட்டகரவித்தையது மயக்குபாசைய-
தன்னியல்பான் மறைக்கப்பட்டியாகாதி கருமங் கடங்கணாங்கு-ம
ன்னியமமுடையோர்க்குந் தெரிவரிய தாவுயர்ந் நியப்பூத்த-பொ
ன்னவிர் செஞ்சடையண்ண லருளுடையோ ருணர்ந்தின்பப் புண
ரிசேர்வார்..........................................(௬)

பரம்பிரமம்பர மசிவம் பரமபதம் பரமுத்தி பகருமின்ன - வரம்
பில்பெயர்புனைந் துசுராட் புருடனுளப் புண்டரிக லரிலென்றுந் - தி
ரந்திகழ்மெய்ஞ்ஞானவுரு விடங்கொண்டசிதம்பரமே செந்நிறாகங்
கரம்பயிலநடமருவு கடவுளெனமறைகளெலாங் கழறுமன்றே. (௭)

படர்கின்றதடுமென்று மான்முதலோ ரபயமெனப் பரவைதந்த-
விடமுண்டவொருபெரிய கடவுளுருவருள்புரிய விளக்கத்தாலே-ய
டரண்டமுறுதகர வித்தையதுநன்னியமே றியிதென்று - மிட
மிந்தவானந்த கனகசபையெனவுணர்ந்தே னின்பங்கூர..........(௮)

நித்தமுடன்சுத்தமுறுமானந்த வம்பலத்தினிருந்தருஞ்செய்யுஞ்-
சித்துருவவித்துருமச் சடையாளன்பதங்களைநேர்ந்தின்பப்பெற்ற-

வெத்தலைகைபவுயிரோனுமுத்தியடைந்திடுமையமின்றிச்சொற்சத்தி
யமீதுத்தமநீ தேறுதியென் றனன்பின்னுஞ் சாற்றுகின்றான். (௯)

உருவருவங்கடந்ததிரு வுருவுடையபரம்பரனை யுச்சிநெற்றி -யிரு
புருவ நடுச்செவிகண் கன்மார்ப மிதயமூட னுந்திகொப்பூழ் - மரு
வருமூலாதாரமூன்பின்னரிருபாற்றம் வடிவிற்சிந்தித் - தருளுடன்
வந்தனைபுரிவோ ரியாவர்சிலர் திருவருளை யடைவரன்றே... ...(௰)

அப்பரிசுபோல்ளவிலெவ்வுயிர்க்கு மருள்புரிவானகிலந்தந்தான்
மெய்ப்படருமொருபாகன் விடைப்பாகன்மதிப்பாகமிலேர்ந்த சென்
னிப் - பொய்ப்பகைவன் முப்பிலையுங் கடந்தவருட் போதமூறைபு
னிதனென்று - மிப்புவனத்திடங்கொண்ட பதிகளுக்கோ ரளவிலவா
மென்னுங்காலே........................................ (௰௧)

சொற்கமைபாதெனவுரைத்த வளவிலாப்பதியவற்றுட் சரர்களே
த்து - மெற்கதிர்சூ ழுலகமொரு வடிவான விராட்புருட னிதயமா
ன - பொற்கமலம்பொற்பொதுவே யவ்வெல்லையளவைபடத்தோற்ற
ம்கெட்டாச் - சிற்கருணைமுதனிலையா புலறயுமென றுறையிடுமத்
தெய்வவேதம்... .............................................. (௰௨)

ஆதலினுலெத்தலமுமிந்தலத்துக் கொவ்வாதாலாவிபுள்ளப்-போ
தி லுடவிடத்தளா யிருந்தாலும் விசேசடித்தும் புணருமாபோ-லோ
து லுமற்றைப்பலவயற்றுன்னி லுறுதுந ளைன்போருள்ள - மீ
துகரம்வைத்துரைப்பக்கண்டனமாலீமற்றுறப்பின் விப்பா முள்
ளம்... ... ... ... ... ... ... ... ... ... [illegible])

ஆங்கதுபோற்பரம்பரனு நிரந்தரமு மண்டத்துக் ... ப்பா-
லிங்கியநிறைவுடைய னுபியு மும் விராட்புருட னி ... ள்ளப்-பூ
ங்கமலமானசிற்றம்பரந்தன்னி லனவரதப்புகழ்கொண்டு -மோங்கி
வளர் பெருங்கருணையுடன் மிகவுமதிகமாயுறைவனன்றே.....(௰௪)

உறைவதுவுமன்றியே மனுநிதனக் கெய்தாத வொருவனெங்கு-
நிறைபிறைவனித்தலத்து னனவரதந்தாண்டவமு நீங்கா னென்றும்-
பொறையுடையபுடவிதனி லெப்பதியுமிப்பதிபோற் பொலிவுண்டா
கா - குறைவறுவானந்தநட மிவணேழியவெவனுளது கூறுங்காலே.

கண்டவர்கட்கியாவோருங் காணுகமுத்தியினைக் காட்ட வென்றே-
யண்டர்பிரானனவரதமானந்தத்தாண்டவ நின்றாடலாலிம் -மண்டல
த்துளெத்தலத்து மதிகமிகவதிகமென வயக்கா நிற்கும் - புண்டரீக
புரந்தலைக்கிக் கொப்பாமப்புண்டரீகபுரந்தானன்றே .... (௰௫)

அருட்காமக்கொடிபாகன் திருவடிகள் சிதம்பரங் கண்டவர்க்கு முத்தி
பொருக்காலன் திருக்காளு முக்காளு முண்மைமயி லுண்மையுமென் -
செருக்காலி துரைத்தேனோ கனைட்போதிற்சிரமிற்றச்சிதைக முன்
னை - யிருக்காதிமறை மொழிந்ததிப்பரிசென்றான் சுருதியெல்லாம்
வல்லான்...................................................(௰௭)

அந்தணர் மன்னவர் வணிகர் சூத்திரர் கண்டாளர் தவமடைந்து
நீத்தோ - ரிந்தமரபிவர்க்கென்றுத்தன்மையோரன்பினரன்பில்லோரி
யாருஞ் - சந்ததமுமானந்த சபையினடம்புரிசலசத் தாள்கண்டோ
ரோன் - முந்தைவினைப்பாசமெலா மூடித்தமுடியாமுத்தி முதல்வ
ராவர்... ... ... ... ... ... ... ... ... ... .(௰௮)

ஆரணமோடாறங்கக் கலைகண்டோர் யோகநெறி யறிந்தடைந்
தோர் - சீரணவுமகம்பலவும் புரிந்துளோர் நித்தமுறுஞ் செந்தீ
யோர்கள் - பூரணவேதாந்தநிலைதெரிந்துளோராயினும்பெற்பொ
துவிஞறுங் - காரணகாரியங்கடந்த தாள்கண்டாலொழிந்துகதிகாண
லாமோ... ... ... ... ... ... ... ... ... ...(௰௯)

அருட்கனகமணிமன்றத் தானந்தத் தாண்டவஞ்செய்தருள்வேதா
ந்தப் - பொருட்கமல பதங்கண்டோர் வீடுறுவ ரெனவெம்மாற்பு
கன்றசெஞ்சொ - லிருட்கடிவுண்டவரறிய வுண்மையிதி லோர்கதை
யுமிசைப்பக்கேட்டி - தெருட்கருணை பறிவுடைய சயிமினிய வென
முனிவன் செப்புகின்றான்... ... ... ... ... ... (௨௰)

வேறு.

ஐஞ்சீரடி யாசிரிய விருத்தம்.

காரொலாம்பயில் பொழிலெலாங் கனிபெலாந்தடத்து - வீரொலா
ங்குளிர்வயலெல்லா நிலனெலாஞ்செந்நெற் - போரொலாம்வளைத் தர
ளங்கள்புதுநிலா வெறிக்கும் - பாரொலாய்புகழ் முத்தமிழ்ப்பாண்டி
நன்னாடு... ...., ... ... ... ... ... ... ... (௨௧)

சந்தனுடவி வாசமுந்தண்டமிழ் மணமு - மந்தமாருதமுலவ்வு
மிடமெலாம் வயங்கு - மந்தராதிபரனைவரு மகமகிழ்ந்தேத்து - மந்
தைமேவிய மதுரைநாட்டியல்பையாருரைப்பார்... ... ...(௨௨)

அத்தலைத்திருநாட்டிலோரந்தணன்வேத - வித்தகன் றிகழுத்தம
மேவன்விமானனென்போ - னைத்திறத்தனயங்க ளெவ்வகைவிரத
நித்தநல்லறமியாவையும் புரியுநன்னெறியோன்.............. (௨௩)

புட்லியென்னுமுழி வந்தனைவிடத்தலைபொருபாற் - கடலைத்தெ
ளூ்ப்பிவினைக்காட்டுமோர்தனையன் - மடலிலாவியபுவிமகள்சுமைமெ
னத்தருக்கு-மடமைதீவினையுருக்கொடுவருதல்போல்வந்தான் (உச)

ஞானமதன்பெயரன்னவன் சரிதம்யார்சொல்வார் - வின்மதங்க
ளைக்கலக்கென வளர்பவன்மேலோர் - பன்மதங்களின்விதித்தவெம்
பாவங்களனைத்தந் - தன்மதங்களால்விரிவுறப்புரிதரச்சமைந்தோன்.

சந்தியைந்தனைமறந்தனன் றுறந்தனன்றருமம் - மூந்தையோர்தமை
ப்பழித்தனன் றொழித்தனன் முறைமை - சிந்தைசெய்த வந்தனைந்த
னன்புணர்ந்தனன் சிறுமை - பந்தமாமறையிகந்தன னுகந்தனன்
பாவம்... ... ... ... ... ... ... ... ... ... (உ௬)

உடலமீதுடற்காவியீ துயிற்குயிராய - கடவுடன்மையீ தெனநெ
றிகாட்டியவேதத் - தொடர்குலத்திடைத்தோற்றியுமந்நெறிமறந்தா
ன் - விடலரும்பெருந் தீவினைவிலக்குவரெவரோ...... ......(உஎ)

இனையதன்மையனிவன்றனைத் தந்தைகண்டிரங்கி-மனையும்வாழ்வு
ம்மரபு நீ போற்றிலையந்தோ - தனையகேளெனப்பன்முறைசமை
வருமயிர்த - மனையநூலிருலறம்பல வறிவுறுத்தினனால்......(உ௮)

தாதைகூறியமொழியெலாந் தமையுணர்ந் தோர்பாற் - றீதுரு
தெனவவன் செவியுறு தமை தெளிந்து - போதமாதவருலகினிற்பு
ரிமயக்கறுத்த - நீதியாமெனத் தனையன்பாதையத்தை நீத்தான்.( )

மாயத்தாலுலைமைந்தனை யன்னையுமறந்தாள் - தாயத்தார் தனித்
துணைவர்கடமருளரோ - லாயத்தாரயலாயுளார்பதியுவாரகலா-நே
யத்தாருடன் றேயத்தாரடைவினி னீத்தார்......... ... ......(௩௰)

ஆடல்வேந்தர்வந்தடிதொழ வருந்தமிழ்த்தெய்வப் - பாடல்வேந்
தர்கள் புகழ்ந்திடப்பாண்டிநாடாளுங் - கூடல்வேந்தனுமொற்றரா
லறிந்துபார்குறைக - ணீடல்வேந்தர்கண்டிருத்தல் பொல்லாதென
நினையா... ... ... ... ... ... ... ... ... ...(௩க)

மறைவழக்குமனுநெறி வழக்குஞ்சைவத் - துறைவழக்கும்
வழங்குநந் தொல்லைநாட்டகத்தோர்-குறைவழக்குண்டாவதேயெ
மைனங்கொதியா - விறைவழக்கினில்லானைநாட் டெல்லை நீத்தொழி
த்தான்... ... ... ... ... ... ... ... ... ...(௩உ)

ஆயநாட்டைவிட்டயல்செல வளவிறேயங்க -னேயகூத்தரோடே
த்திசை போற்றும்பாழ்ப்பாணர் - போயநாளுடைத் தூத்தர்பொலி

லாருடன் புணர்ந்து - சேயநாட்டிரிவான்பெறு மாசையிற் றிளைத்
தான்... ... ... ... ... ... ... ... ... ... (௩௩)

(கொச்சகக்கலிப்பா.)

ஞானநெறித்தனிவருவோர் கருத்தலையப் பொருள்கவர்ந்து - மூ
னுயிர்போனுறவுபுரித் துடைமையுடனெடுத்தொழித்தும் - போனை
கநீரடைக்காயிற் புரிமயக்கஞ்சிறிதகலா - வானமருந்தருந்தியவரரு
ளும்செல்வங்கொணர்ந்தகன்றும்... ... ... ... ..... (௩௪)

அந்தணரைவதைசெய்து மறவோரையுயிர்கவர்ந்து - மூந்துமெ
றிவிருத்தர்களைப் பாலகரைமூற்றுவித்தும் - பைந்தொடியார்தமை
முடித்தும் பல்கோடிகொலைபுரிந்தும்- வந்தபொருளான் மகிழ்வா
ன் மதன்கணையால்வருந்துவான்... ... ... ... ... (௩௫)

வாதித்தவேல்விழியார்மயலளற்றின் வீழ்ந்தழுந்தி - யாதித்தொ
ல்குலமுடையவரில்வயரையயலாராற்-பேதித்துஞ்சோர்வதித்துமெ
ட்பழுறத தன்னுரையாற் - போதித்தும்பொருள்கொடுத்தும்புண
ர்ந்தவர்தநெறியொழித்தான்... ... ... ... ... ... (௩௬)

மகங்களளவிலபுரிந்தோர் மறைவரம்புகண்டோர்தம் - மகந்தெ
ளிந்தோர்மனைவியர்களனைத்தும்பேர்புவிதாங்கு - நகங்கடனையிறுத்
துக்கானமுங்கர்சாய்த்ததுபோல - விகம்பரமென்றறியாதோனிலகி
யகற்பழித்தொழித்தான்... ... ... ... ... ... ...(௩௭)

ஈந்தறியானொருண்மை யிசைத்தறியான்பேரறநூ - லாய்ந்தறி
யானுய்ந்தவரை யடைந்தறியானொருதீர்த்தந் -தோய்ந்தறியான்றெ
ய்வமெனச் சொற்றுமறியானிளைய - நீந்தறியாவகையாவு நினைவு
ளாயாக்கையிற்கொண்டான்... ... ... ... ... ... (௩௮)

கொலைகளிலிங்கிவன்முடியாக் கொலையில்லையாவர்க்கும் - கலகமு
றுங்களவுதனி லிவன்புரியாக்களவில்லை - யிலகுபெருட்புடவியிடை
யிவனழியாக்கற்பில்லை - நலமகறீவினைக்கொடியோ னிவ்வண்ணநா
ட்கழித்தான்... ... ... ... ... ... ... ... ...(௩௯)

கருங்கடலுட்டிசைமயங்கிக் கலங்காணுதுழலும்போ - ரருங்கலமங்
கொருகாலா லேற்றகரைசெல்வதுபோ - லொருங்கரியபவக்கடல்வா
புலையவன்றான் வல்வினைக்காண் - மருங்குதவியுந்திடலான் மறிற்றி
ல்லைத் தில்லைசென்றான்... ... ... ... ... ... ... (௪௰)

வானின்றுமடலைந்தின்று கமலமிசை நின்றுமழன் - மேனின்றுமவம்
புரிந்தும் பெறற்கரியவீட்டின்பம் - யானின்றுகருக்னென விளங்
கொடியோடானந்தத் - தேனின்றுநடம்புரியுந் திருவெல்லைப்புறத்
தணைந்தான் ... ... ... ... ... ... ... ... (சக)

வேறு.

[அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.]

அங்கொடிங்கொடுசெல்போ லரும்பிறப்பிறப்பிடைத் - தங்கிவெந்
துயர்க்கணிற்றணவுமா றுமார்கழித் - திங்கடன்னிலா திரைத்தினத்து
ம்வானம்வையக - மெங்குமுய்ய வேறிமுங்கு மெழில்விழா நடந்
ததால்... ... ... ... ... ... ... ... ... ...(சஉ)

பந்தமாடவீதியிற் பளிங்கிழைத்தமுன்றில்வாய் - முந்துசெம்ம
ணிக்கணத்தின் முறையிழைத்தநிறைகுட - மந்தமற்றபெருமைகொ
ண்டவாசிலா திலங்குபாற் - சிந்துவின்கணிரவிவந் துதித்த செய்கை
நிவணுமே... ... ... ... ... ... (சங)

மாலடைத்தசெய்யசோதி மணியினிற் குயிற்றிடும் - பாலிகைக்
கண்வெண்முளைப் பரப்பெழுந்த பரிசுதான் - வேலைதந்த வமுதவி
ந்து மதியமன்றிவெய்யவன் - கோலமண்டலத்தும் வந்து குடிபுகு
ந்ததொக்குமால்... ... ... ... ... ... (சச)

குருடணிக்குலங்களிற் குயிற்றுமம்பொன் மாடமு - மருவுவா
யின்மணிதயங்கு மகரதோரணங்களு - மிருமை கொண்ட வுதயவெ
ற்பினத்தினங்க ளுதயமா - யொருவிகந்த விரவிவெண்ணி னுள்ள
வாயிழைக்குமே... ... ... ... ... (சரு)

இரவியால்விளங்குமாறிசுந்துநில்லையம்பலம் - பரவுசெய்யசோ
தியே பரந்திலங்குவெய்யவன் - கிரணமுந்துவெம்மைவந்து கிட்டு
ஞளிகேதன - திரவுசேதனக்குமா நிறைந்துமேனிழற்றுமால்....()

யாகசாலைதெற்றிமுற்ற பேசிலாத வீதிவாய் - மாகநாடு கோபுரங்
கள் மண்டபங்க ளாலயம் - பாகசாதனாதியண்டர் பகுதி தன் றமன்
றியுஞ் - சோகமுற்ற முனிவர் தொண்டர் தொகுதியென்று மிகுதி
யால்... ... ... ... ... ... ... (சஎ)

புரமெரிந்து விழநகைத்த புனிதனன்பரளவிலார் - வரமிகுந்த
மேனிநீறு மறுகிலங்கு மொளிகள்பாற் - பரவைமுன் பிரிந்தமெய்
ப்பதஞ்சவிக்கவேயமே - விரவிவந்து காணவெங்குமேவிநேடலொ
க்குமே... ... ... ... ... ... ... (சஅ)

மிக்கதேவர் தந்நெருக்கின் வழிவிலங்கி வந்துளோர் - மிக்கதஞ் செய்தொழிலமிந்து வேறுவேறு சேர்வாரற் - பக்கமேபணிந்துடீன் பதங்கர் தங்கடோர்தனைத் - தக்கதே மொடையமாழி யொன்றுகண்டு ணர்வரால்... ... ... ... ... ... (௪௯)

அண்டர்சூழ் விமானகோடியந்தரத்தபந்தரான் - மண்டலத்தினைத்தகர மன்னினங்கவற்றினுல் - விண்டதேசதோவிளக்கும்வேதனுனம்பலங் - கொண்டசோதி யண்டரண்ட கூடமெங்கு மூழ்மோல்.

முடிகளோடு முடிநெருங்கி முந்தி முந்திவந்துநின் - றடிகண்டாள் ன்றி லாடல்கண்ட வண்டராவனைந்தவெண் - பொடிகொண் மேனிதிலவுவீசு புனிதஞான வன்பரும் - படியின்மேல் விழுந்தெழுந்து பாடியெங்குமாடினர்... ... ... ... ... (௫௧)

கஃதுவு தேவர்மகுடமீது கற்பகத்தின்மாலைவீழ் - மதுவையுண்டு புதுமைகொண்டவண்டினங்களித்தபாற் - பருமமன்னகண்கள்கொண்டு பண்கள்கொண்டமாமறைப் - பொதுவினுடுமதுவையுண்டு புல்வருங்களித்தனர்... ... ... ... ... (௫௨)

முற்று முள்ளபுவன நின்று வந்த வந்தவானுளோர் - மொற்றைநாளணைந்ததெஞ்மெறதிர்ந்துதன் னில்வினவுறப் - பெற்றவோசையன்பர்பூசை பேணுகின்றபலவிதத் தூற்றவார வங்கடன்னி லொளிமழுங்கிமறையுமால்... ... ... ... ... ... (௫௩)

பங்கயத்தடம்பணிந்துபாசம்வீசியேறுவா - ரங்கண்மிக்காளநல்கியமராஞ்சவிரவுவார் - சங்கரற்குகந்தசைவ தருமநின்று புரிகுவார் - பொங்கிமிக்கெழுந்தவோசை புவனமெங்கும் விரவுமால்.( )

அரம்பைமாதர் கீதவோதையாடல்ஏதைபாரணம் - பரம்புமோதைபல்லியம் பரப்புமோதையன்றியுன் - வரம்பிலார்நெருங்குதேவர்மகுடமோது நந்திகைப் - பிரம்பினோதை சலநியோதைசிறிதெனப்பிறங்குமால்... ..... ... ... ... (௫௫)

புரமெரித்த ஆங்கறித்த புண்டரீகவந்தணன் - சிரமறுத்த குஞ்சிலக்கைவேலையன்று செற்றது- நரமடங்கலைத்தொலைத்த நன்குமின்னவாதியாம்- வரமிகுப்புராணமேவழுந்துவார்களெங்கணும்(௫௬)

சரிதையீதுகிரியையீது தக்கயோகமீதுதற் - குரியஞானமீதெனு வுணர்த்துமாகமங்களும் - புரியுமாகமங்களாதி புகலுமாரணங்களுந் - தெரிவுளோர்கள்கழகமேதிகழ்ந்துயர்ந்தநிக்கெலாம்.(௫௭)

வினாவின்வேலை யன்னமாயன்வேதனெய்தவாயினிற் - கருடனன்
னமங்குணங்கல் கனகவெற்பும் வெள்ளிமால்- வரையுமெம் மிடத்தி
னும்வயங்குமன்றி னிறைவனென்- றருடவத்த சிறைபடைத் தன்னந்
ததன்மை யொக்குமே... ... ... ... ... (௫௮)

அருகுவாழ மங்கைநேய வண்ணலாடலாதரம் - பெருகுவார்கள
ருவிகண்கள் பெருகஞானவமிர்தமே- பருகுவார்கள்புளகமெய்ப்ப
டைத்துளார்கள் பரவசத் - தருகுவார்களின்பவெள்ள முற்றுளார்க
ளெங்கணும்... ... ... ... ... .. (௫௯)

வணங்குவார்வழுத்துவார் மகிழ்ந்துகாண லின்றிநின் - றுணங்கு
வாரிருந்துதாளையுள்குவாரிடப்புறத் - தணங்குகாணமன்றுளாடுமா
டல்கண்டியாவரு - மிணங்கொணாத சீவன்முத்து மெய்தியின்ப மெ
ய்துவார்... ... ... ... ... ... (௬௰)

இன்னதன்மையெனவுரைக்கவெய்தொணாதநல்விழா- நன்னலத்த
யங்குதில்லை நகரமைந்தடைந்துடன் - றுல்லுகின்றபாணராதிசூழ
நின்ற தூய்மதன் - பொன்னினம் பலத்துளன்ன போதுவந்துபுக்
கனன்... ... ... ... ... ... ... ... ... .. ... .... (௬௧)

தணிவிலாதகனகமன்று சபையின்முன்னர் நின்றுகைம் - மணி
கள்பேரிதாளமா மதங்கமுன்முழங்கவந் - தணியுலாவு காமர்வல்லி
யசைதல்போலுருத்திரக் - கணிகைமாதர்பரதநூதிகாணவாடல்பேணி
னூர்.. ... ... ..... ... ... ... ... ... ... ... ... ... (௬௨)

திருவிரும்புமாதராடல் செய்தல்கண்டியாவர்முன் - மருவுபாட
லாடலென்றுவடதிசைக்கணேக்கினு - னருள்சுரந்து வல்லிகாணவம்
பலத்துளாடுமோர் - கருணைவெள்ளநின்றதன்மை கண்கள் கொண்டு
கண்டனன்... .... ... ... ... ... ... ... ... ... ... ... (௬௩)

நித்திலத்தையொத்தவூரணிலவுவீசுமுகமதிக் - குத்திரத்தனத்து
மாதர் கொண்டவாடலங்கறச் - சித்திமுத்திநல்குகின்றதில்லையெல்லை
தன்னைவிட் - டுத்தரத்திசைக்கணன்ப ருடன்விரைந்துசென்றனன்.

கடலுலாவுபுடவியிற்கருத்திறுக்கிசைந்தசெய் - திடைவிடாதுதி
ரியுநாளி னெய்துகின்ற நெறியினேர் - படருகின்றபணைகள் சூழ்ப
ராமரமரத்திடைத் - தொடருநீழலதனின்மன்று தூர்த்தரோடி
ருந்தனன்... ... ... ... ... ... ... ... ... (௬௪)

வேறு.

[ஐஞ்சீரடியாசிரிய விருத்தம்.]

தெரிக்கொணா மறையாவையுஞ்சிறந்தநூல்பலவும் - விரிக்குநாவினனருக்கனிலொளிவிடுமெய்யன் - பரிக்குஞானமுங்கருணையும்படைத்தனன்வினையை - யரிக்குமாதவத்தந்தணனொருவனங்கடைந்தான்.

வந்தவந்தணனைத்தரு நீழலின் மதிகு - டந்திவண்ணனைச் சிந்தை செய்தமர்ந்திளைப்பாறிச் - சந்தமாமறைவாக்கினாற்றன்மகன்றனைப்பார்த் - தெந்தநாடுமுன்யாவனீ யெனவெதிர்வினவ .. ...(௬௭)

அழிவில்லாததன்றுமெந் நாட்டினுடை நீதி - யொழிவிலாத தன்குலனுமக்குலத்திடை யொழுங்கின் - வழிநிலாதவெங் குணங்களும்புரிந்தவன்பாவத் - தொழிலுமந்தணன் செவித்துணைசுடும்படிச்சொன்னான்... ... ... ... ... ... (௬௮)

சொற்றவாய்மைகேட்டுள்ளமு முடலமுந்துளங்கி - யெற்றைநாளிவனுய்வதே யெனமனமிரங்கித் - துற்றவல்விருந் தொல்வினைத் துன்மதன்றனைப்பார்த் - துற்றவன்பினனந்தணனொருமொழியுரைப்பான்... ... ... ... ... ... (௬௯)

நீடும்வல்வினைபுரிதலா னெஞ்சுறுவஞ்சம் - வீடிலாத நீ பற்பல விளம்பருங்கற்ப - மூடிகாணருமிருபதோடோரிருநான்கு - கோடிமாநிரயக்குழி குளித்தனிச்சயமே... ... ... (௭௰)

நினதுசெய்கையை நினைதொறு நினைதொறு மெனது - மனனிடத்தெழு மச்சமோடருண்மிக வளரும் - வினைகளுள்ளன மாய்த்திடுநெறிவிளம்புவனு - லனையதன்மைநீபுரிந்திடின் வினையுனையடரா.

ஆதலால்விரைந் திக்கணத்ததகை புரிதி - நீறுசெய்தபின் பயந்தது தீர்த்திட முயல்வோர்க் - கோதலாநெறியெனமறையுரைத்தலானிதிப் - போதமுற்றுநீ கேட்டியேற்புகல்வனென் றுரைத்தான். ( )

சுற்றகேள்வியாலறிவினாற் கருணையாற்பவத்தைச் - செற்றமாதவ வேதியன் றிருமொழிகேளா - வுற்றடாமதத் தொருகையே லொருகையைத்தாக்கி - வெற்றிமாமுகசிரித்தென வெடிபட நகைத்தான்.

நக்கதுன்மதனன்னவற்பார்த்துநான்மறையோய் - தொக்கமாமறை நல்வினை சூழ்ந்ததீ வினைகள் - மிக்கவேழைநின் போல்பவரிவங்குவரன்றித் - தக்கசெய்கையென் போல்பவர்க் கென்செயுஞ்சாற்றாய்... ... ... ... ... ...(௭௪)

னைதுகற்புடையாளிடைத்தனையனைப்பெறுதற் - கனையகாலத்தி
லனைவதேயறமென்று மயலார் - மனைவிபாலணைந்தாற்கொடு வினை
யென்றும்வழங்கு - மினையயாவருங்காணநீ யிசைத்தவாறெக்கும்.

இன்னபோல்வன வெண்ணில்விகற்பங்கள்கூறி - யன்னவந்தணன்
றன்னைபு நிந்தனையறைந்து - துன்னுநண்புடைப் பண்பிலாத் துர்
த்தர்களுடனுஞ்-சென்னியர்குழுவொடுந்தனதிச்சையிற்சென்றான்.

செஞ்சொலானெறி யாம்பலசெப்பியுங் கொடுமை - விஞ்சுதீவி
னை நீக்குமாறிலைசந்திலன் வினைசெய் - தஞ்சலில்லவர்நரகன்றியருள்
பெறுமொன்று - நெஞ்சநொந்தன்னிடத்தகன் றுணருணர்ங்கான்.

சத்தியத்திருமறைமொழிச்சயிமினிமுனிவ - மத்தர் போல்வருந்
ஞான்மதன் மனத்திணுணின்ற - நித்தருடகச்சரணங்கணோர்கண்டுசிவ
ன் - முத்தருகிய துணர்ந்திலன் முழுதுணர்மறையோன்... (௭௮)

அந்தணற்பழித்தகன்றவத் ஞான்மதனொடுநா - ளிந்த மாளிகைத்
துலைந்துவிந்தாடவியெய்தி - வந்தவேலையிற் சிந்துமோர்வல்விடப்
பாந்தண் - முந்துறக்கடித் தகன்றிடவாவிபொய் முடிந்தான்... ()

வேறு.

[எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.]

மடித்தவாயின ரிடித்தசொல்லினர் மருண்டபார்வையர்கொடுந்த
மூற் - குடித்தகுஞ்சியர்பொடித்தபங்கியர் குறித்த வன்மையர்க தங்
கொளத் - துடித்தமேனியர் விடுத்தகாலனடுதூதர்வாயுவிம்மிவிரைந்
துபோ - மடித்தலத்தினர்முடித்தவல்வினர்களக்கணத்திலடுத்தனர்;

பற்றுமென்பர்சிலர் பற்றிவெங்கொடிய பாவியைத்தனையின் மீ
தெடுத் - தெற்றுமென்பர்சில ரெற்றிவெந்தசையை யீருமென்பர்சி
லர்மார்பிடைக் - குத்துமென்பர்சிலர்தண்டியாதொழிதல் குற்றமெ
ன்பர்சிலர் முற்றுறச் - சுற்றுமென்பர்சிலர் பாசம்வீசியுடல் சூழு
மென்றுபலர் துன்னினூர்... ... ... ... ...(௮௧)

ஞற்றவக்கொடிய நெட்டிபதண்டதர தூதரெண்ணிலர்கடுன்மதன்-
மற்றடம்புயமுரிந்தொசிந்துக வயங்கொள்பாசமிறுகப்பிணித்-தெ
ற்றநாளுமெவருக்கு மிக்கபயமெய்துவிப்பதொரு செய்கை யே-ப
ற்றுகின்றதம துலகினிற்கடிது படருவானினையும்வேலையின். (௮௨)

நாதனாருள்படைத்துயர்ந்தவருவன்றிதேவருளேவலான் -மா
திரங்களொளி வீசுபூதிநின்ற வடிவவொப்பொழுது முடிவிலார்-தி

லாநதிரி புண்டரத்தர்திரிசூலர்செஞ் சடையர்துகளறும் - போதமி
க்கசிவ நாதரெண்ணிலர்கள்யோக்கியங்கெதிர் பொருந்தினார்.(௮௩)

மட்டிலாதயம தூதர்மூற்றுமுக மாறியோட வவன்வன்புயக்-கட்
டறுத்தொளிர் விமானமீதினிது கடிதுவைத்தகில்வண்டமு -முட்
நின்றவருணர்ந்தி தேவர்தமூகம் பெறக்கருதிமாதவச் - சிட்டர்விட்
டகல வரியதன்கயிலை செல்லுவார்கள்சிலர் சென்றனர்... ...(௮௪)

தக்கநந்தமிழுமங்கமாமறை தழங்கவானவர் வணங்குமன் -ஞெ
க்கபேரொளி விமானமீதுவருசுடரவற்பொருவு தூன்மகன் - செக்
கரஞ்சடையு முக்கணும்பரவு இன்புபங்கமொருநாலுநற் - கைக்க
பாலமுமிலங்குறச்சிவ கணேதிபர்க்கிடைகலந்தனன்... ... ...(௮௫)

காலதூதுவர்கள் கண்டு கொண்டுமுதிர் கருமமானமு மிகுந்திட
ன் - மேலிடா வவனை யெங்கள்பால்விடுமின் விடுமினென்றவர் விரை
ந்துசென் - றாலகாலநிக ராவதாமென வடர்ந்தபோதெதிர் திரும்பி
னார் - சீலஞானசிவ தூதர்நின்றுசிலர் சீறினாரவரை நாடினார்.(௮௬)

தாளினாலனலுமிர்ப்பினாலுயர் தடக்கையானைகமுழக்கினாற்-சே
னினாலிடியு மட்கமிக்கவதிர் சொல்லினாலடரும் வில்லினால் - வாளி
னாலயில்கொள் வேலினான்மழு வலத்தினாலயன வன்னியாம் - கூளி
நாமகிழ வந்தெதிர்த்தவர் குலைந்துசாய்தரமலைந்தனர்... ...(௮௭)

கரமறுந்துமழல் விழிசிதைந்துமழல் காறுணிந்துடலை யெனவி
ழச் - சிரமிறந்துமிரு கன்னதாடமொடு செவிதகர்ந்துமுயி ருலையு
மா - றரமொடித்துமுயர்புயமுரிந்துமெயி றுக்கவிடிந்துமகரிலடை
யநீள்-வரம்பிரிதருநதியுதிரமோடமிடன்மடியமிக்கமரின் முநிஞர்.

செக்கர்வானமெரிகுஞ்சிதாரகைகள்சிந்துதந்தநிரைகொண்டவே.
தொக்குமேவுமுடலந்தடித்தனைய சொரிதமற்கன்விழிசுடர்கடா-மி
க்கவெண்ணில்பல பிறைகளுள்ளவென மேவுபேரெயிறுவிரவலா-வ
க்கணத்தியம படர்முடந்தகள மந்தரத்தைநிகராகுயால்.... (௮௯)

அரிந்ததுண்டமுமிழந்த கண்களுமழிந்தவாய்களு மலக்கணு-மு
ரிந்தமார்பமுமயங்குநெஞ்சமு முடிந்தசென்னியுநெடுங்குடர் -சரி
ந்தவுந்தியுமொடிந்தெலும்பொடுதறிந்ததாள்களுமுயிர்ப்புறம்-பி
ரிந்தபேருடலுமன்றிநின்றதொருபேருமங்ஙனிலபேசினே. (௯௰)

பல்லையாடமரிலூனுகர்ந்துமிசைபறவையாடின பதம்பெயர்த்-
தல்லையாடினமகிழ்ந்துபாரிட மடங்கவாடினவிழுங் குறைத் - தலை

களாடின விரத்தசாதரதரங்கமாடினவரந்தவா - வுலகையாடல்கொ
ளாயல்லகாலபடருந்துலந்தகளமுற்றுமே.......... ........ (கங)

சிட்டரானசிவஞானமாதவர்கள் சிந்தைநோவவொரு வன்மைசெ
ய் - திட்டபாவிகுல நிலைகுலைந்ததென வெய்துகாலன்விடுதூதருங்-
கெட்டொழிந்துபொடிபட்டெனுமொரு கேடிலாதசிவ தூதர்கை
ப் - பட்டபேரொழியநின்றபேர்யம பதத்தைநாடினர்படர்ந்தனர்.

இன்னதென்னவுரை யாடொணாதபய மெய்தியோடினர்தமிறை
வனைத் - துன்னியுச்சமோடிறைஞ்சி நின்றுமிகுதுன்மதன்ற னுயிர்
கொண்டது - மன்னபோதுசிவதூதர்வந்ததுமடர்ந்ததுந்தம்படை
க்கணுஞ் - சின்னமுற்றதுவு மன்னவற்கொடவர் சென்றதுங் கடிது
செப்பினார்... ... ... ... ... ... ... ... ... (கச)

[அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.]

[வேறு.]

தெரிந்ததூதர்சொற்செவித்துணை புகுதலுஞ் சினக்கொடுந் தழ
ன்மேன்மேல் - விரிந்தபங்கிகள்பொரிந்தனமெசழிந்தவர்வெருக்கொ
ளப்புருவங்கண்முரிந்து நெற்றிமீதாடின நீடியமுடியபுகைவீசியெ
ரிந்தகண்ணிணைசொரிந்தனகொடுந்தழவிருண்டனதிசையெல்லாம்.

மண்டுவெங்கதத்தழறலைக் கொண்டென வளர்குஞ்சி துளங்கப்பா
ரெண்டிசாமுகம்பொழியெழத் துணைக்கரமெற்றிமுற்றில்லாத - து
ண்டவெண்பிறை யெயிற்றிடை நிலவெழச்சுராசுரர்வெருக்கொள்ள
வண்டகோளகை வெடிபடவிடிபடவலமரநகைசெய்தான்... (கரு)

செஞ்சேவேயுமக் கெதிர்ப்படுவாரிலை சிறிதுங்களினிங்கள் - வெ
ஞ்சமர்த்திறம்விளைத்திரோ விளைத்தலால்விளைந்ததோவிதுநீவி - ர
ஞ்சலுள்ளதுபகர்மினென் றிடியென வறைந்தனனவரஞ்சிக் - குஞ்
சிதாழ்த்தெமர்குறையலவயலவர் குறையெனக்கதமிக்கான்...(கசா)

தொடர்ந்துவந்தெனதூதரைச்சிலரெதிர்தொலைப்பதேதெவலந்
தானொன் - றடர்ந்தவாசகங் கெடபதே யாயினு மதிசயமிலங்கள்-
படர்ந்தவாண்மையுமானமு மென்பெருங்காவலுஞ்செங்கோலு - நட
ந்தவாமிதன் றூரன்றிதுவெனப் பன்முறைநவில்கின்றான்...(கஎ)

இவைபுரிந்தவச்சிவகணத்தவரொடு மென்னைமுற் றிறைவற்காற்-
றவமுயன்றவர்தமைநமதூதுவர்தடுத்தனரோவென்னக் - கயருநெ
ஞ்சினனஞ்சினன் றுன்மதனல்வினை க்[illegible]குண்டெட-லவைவிளங்கிய
சித்திரகுத்தர்நீரறைந்திடும் விஷாந்தென்றான்.... .... ......(கஅ)

கருதினும்பயந் தரும் பெருங் கடுந்தொழிற் காலன்வாய் மொழி
கேளா -வெருவியங்கவர்பன்முறைபன்முறைமிகவுமங்காராய்ந் து-த
ருமகேள்கொடுந்துன்மத னிப்பவந்தனின்மனமொழியாக்கை -மரு
வுபுண்ணிய மனுவுள விலனென வணங்கிநின் றெதிர் சொன்னார்.()

துகடவிர்ந்ததோர்புண்ணியமிலனெனச்சொற்றலுந்தொலையாப்
பா - விகடனக்கொரு துணையிலைசெயல்வியப்பென வெழுந்தேய
ண்ட - முகடுமேல்கொளக்கால்கிளர்கோட்டுவெம்மேயாட்டுமைம்மா
னெருப்பகடுமுன்வரவெரிநிடைப் புகுந்துமைப்பாவைபோல் வழி
க்கொண்டான்....... ..... ......... .................. ... .......(௰)

அதிசயத்துடனிறந்தவனொழிந்துவந்தடைந்ததூதுவர்சூழ-முதி
ருமச்சமுமேல்கொளக்கோபமுமுண்டெழ விரைந்தேகி-விதிபரம்
பரம்பொருளெனவரு ளெனவிளங்கினேர்யாவர்க்குங்-கதியளித்திட
நின்றருளெம்பரன் கயிலையைக்கண்ணுற்றான்..... ... ...... .... ...(௰௧)

ஆலகாலமுண்டருள்பா லாலயத் தலைக்கடைப்புறத்தங்கோர்-சில
மாயனுமயன்முதலோர்தொழுஞ் சிறப்பினுற்சிறந்தென்று - ஞால
மேழினோடேழும்வந் தெய்தினு நவிலைடவெளிகாட்டுங் - கோலமா
மணிமண்டபமுளதது கூறலாம்படித்தன்றால் ............... ...(௰௨)

மிக்கபேரொளியுலகெலாம்விளங்குறவிளங்குமண்டபந்தனிற்-
றிக்குபாலருங்கடவுளர்தொகுதியுஞ் சென்றுமுன் பணிந்தேத்தித்-த
க்ககாரியம்புகன்றிட விஞ்சையர்சாரணர்புகழ்பாட[illegible] - செக்கரஞ்ச
டைமுனிவருஞ் சித்தருந்திரண்டுநின் றெதிர்போற்ற...... ...(௰௩)

தேடியாரணங்காண்கிலாப் பரம்பரன் றிருவுருத்தவர்தன்று - னீ
டியாவருந்தொழப்பெறுங்குணதியர்நிரைதொழப்பன் னூறு - கோ
டிகாலர்வந்தெதிர்ப்பினும் விழுங்கிமுன்றேக்கிடுங் குறட்பூதப்-பா
டியாடிமுன்னிறைஞ்சிடவலகைகள்பணிந்தெதிர் பார்த்தாங்க.(௰௪)

அந்திவெண்பிறை வேணியு நுதற்கணுமணிப்புய மொருநான்கு
ஞ் - சுந்தரந்திகழுமழுப்பிரம்புடன் சரிகையுந்தடக்கையும்-வ
ந்தசூரியனொண்ணிலர்புகுந்தனவடிவமுமுழுநீறு - மெந்தை தந்திட
ப்பெறுநந்திவானவனிருந்தனனிவிதம்மா...... ........ ...(௰௫)

இருவர்சங்கரருளுசின நந்தியெம்மிறைவன் வீற்றிருந் தோங்கு-
மருவருஞ்சபைச்சேணிடைக் கண்டுதன் வாகனத் திழிந்துள்ளம்-வெ
ருவியாடையையொதுக்கிவாய்புதைத்தருள்வெள்ளமேயனையான்று
ன் - கருகுமுள்ளமும்வடி[illegible]ம் படைத்தவெங்காலன்வந்தெதிர் சா
ர்ந்தான்.............................................. .........(௰௬)

கண்டிறைஞ்சிமுக்கால்வலங்கொண்டுடன் காசினியிடைச்சேர்ந்த-
தண்டுபோற்படிந்தீரிருகாலருந் தலத்திடைப்பணிந்தேத்திக் - கொ
ண்டலாமென நின்றுகால்குவியக்கைகுவித்தியாவருங்கேட்ப-மண்டு
பேரருணந்திவானவனெதிர் வகுத்துரைசெய்கின்றான்........(௱௭)

தெண்ணிலாநறுங்கண்ணிபஞ்சடாடவித் தெய்வநாயகனெங்கு-
மூண்ணிலாவிபபகவனெம்பரம்பரனுமையவளொருபாகனெண்ணி
லாவுயிர் புரிந்தவல்வினையறிந்திதற்கென்றுறுந்தண்டப்-பண்ணு
மாறெனக்கருளியேபணிக்கயான்பணிவிடைப்படிநின்றேன். (௱௮)

இற்றைநாள்வரையோரிடையூறும்வந்தெய்திடா துலகத்தென்-
னெறிபாணையேநடந்ததிப் போதொழிந்ததென்னதிகார-முற்று
ம்வெஃகிடிலன் வேண்டினார்க்கிவதேமுறைமையென்றவிர்தலடஞ்சு-
சுற்றுபாசமங் கெடுத்துமுன்வைத்தனன் சுரர்கணந் தொலைகாண.

ஆற்றல்சால்யமன்செய்கை கண்டப்படியாகநின்னதிகார-மாற்றி
வேறொருகாலனுக் குன்பதம் வழங்குதல் வழக்கல்லவெ - னேற்று
நாயகன்சைவ நன்னெறிதனக் கிடரிழைப்பாதன்பாற் - போற்றலாத
நீயொழிவதே நெறியெனப்பின்னரும்புகல்கின்றான்........(௱௰)

தேவர்தேவனுங்கண்டனையானுமெத் தேவருமுனிவோரும் - யாவ
ருந்தொழக்குரும்பெரியோன்றனையிடருறப்பிணிப்பித்த - பாவகா
ரிநீயென்செய்தாய்சிவனையேபழித்ததன்றேவென்றுந் - தாவிலாத
வெஞ்சினத்தொடுமருள்செய்தான்சங்கரனருள்பெற்றான்...(௱௰௧)

(கலிவிருத்தம்.)

[வேறு.]

அடுந்திறற்கருடபேர்க்கதிபன்கூறலு - மொடுங்கினனுயிர்ப்பிலனு
டலமுள்ளமு - நடுங்கினன்வேர்த்தனனுவணங்கினன் -படுங்கொடும்
பயமெழும்பரவையாழ்ந்தனன்...............(௱௰௨)

கற்றுணர்வுற்றநற்கலையுஞானமு - முற்றுணர்பேருண்முயங்குமா
வ - வற்றைநான்மறலிதனச்சமொப்புறச் - சொற்றிடிலெளிதென
ச்சொல்லலாகுமோ..............(௱௰௩)

பயக்கடல்விழுந்தொருபடியினுலெழுந் - தயர்ந்தன னறிவுவந்த
டையப்பேரரு - ணயப்பிடைவிடாவருணந்திதேவன்முன் - வயத்தி
றன்மறலியும்வணங்கிக்கூறுவான்............(௱௰௪)

தலைவநின்னேவலைத் தலையின் மீதுகொண் - டலைவறவென்றொழி
லாற்றினேன்மலைச் - சிலையவனன்பனாத்தீங்குசெய்தது - மிலைதிரு
வுளத்தினுக்கிசைந்தசெய்கெனு.............(௱௰௫)

நன்றுமிப்பிறப்பிடை நவிலித்துன்மதன் - புண்ணியமொன்றி
லன்புனிதற்கன்பனென் - றெண்ணவுந்தகுவனேயெனத்துதா துவ-ந
ண்ணலேயறியுறுதடர்ப்பபோவென்றான்..................(௱௰௬)

என்றலுமிணைக்கையிளநிலாவெழ - நன்றிதுநன்றெனநக்கிவாண்
வ - னன்றவற்பார்த்திவனரனுக்கன்பனென்-றொன்றுநீபுணர்த்திலை
போலுமுள்ளதால்....................................... (௱௰௭)

வன்பெருநரகிடைமறுகுவோர்சிவ - னன்பராயிகழ்பவரன்றியங்
கவர் - பொன்பொதிசடாடவிப் புலிதற்கொப்பெனா-வின்புறவோ
ர்கதிக் கிறைவராவரால்.................................. (௱௰௮)

நிறையபடியவர்பிழைநீக்கியாளுமெங்-கறைமலிகளரருட்கடனதா
தலான்- முறைபுரிநீயறியாதுமுற்றிய - வறைபெருங்குறைமொழி
த்தருள்வனஞ்சனீ... ... ... ... ... ... ... ... ......(௱௰௯)

அற்புதற்கன்பனேயாமித்துன்மதன் - முற்பகனல்வினை முயங்க
முன்றொர்நாட் - டற்பரமாகியதமனியப்பொதுச் - சிற்பர நாடகந்
தெரிசித்தானரோ... ... ... ... ... ... ... ... ... ... (௱௨௰)

தாவருஞ்சிதம்பரந்தன்னிலற்புத - மேவருந்திருநடமேவிக்காண்
போற் - றீவினைமிக்கவர் திருந்துபுண்ணியர் - பாவருமுத்தரோனா
யமில்லையால்...........................................(௱௨௰௧)

ஆதலினின்றறியாதுசெய்தவித் - தீதுநீயன்பனுஞ்செய்கைகொ
ண்டறு- ஞாதனும்பொறுத்தனனிங்கயாரையும் - வேதனைத் தண்ட
மும்விளங்கச்செய்தியால்...................................(௱௨௰௨)

செய்தவிங்குளவொலிந்திவன்றன் றொண்டர்பா - லெய்துறுநறவிர்தி
யேவிறைவற்கன்பனீ - கைதவமிலாதவெங் காலதின்பதி - நொய்தி
னிலேகென நோக்கிக்கூறினான்......... ... ......... ......(௱௨௰௩)

அந்தகனதிசயித்தடியர்தீவினைப் - பந்தனையெய்திறும்படாவெ
ன்றனை - யெந்தையெம்பாற்பரற்கன்பனொன்பவர் - தந்தமதொழு
க்கநீசாற்றென்றேத்தினான்... ... ... ... ... ... (௱௨௰௪)

அற்றவன்மொழிதல்கேட்டரனுக்கன்பர்தம் - முற்றபேரொழுக்க
மெய்யுணர்த்துவான்புலன் - செற்றெழுமுணர்வுடைச்சிலாதரன்பெறு
தற்றவப்பயனிசர்நந்திகூறுவான்...... ... ... .. (௱௨௰௫)

[அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.]

வேறு.

முந்தைமறையாகமநன்னெறியணிபுண்டாரகமுழுதுநீற்றோர்-
சிந்தையினன்பிலரேனுஞ்சிவார்ச்சனைகள்செயவிரும்பிச்செய்வோர்
தீங்கின்-பந்தமுளரோனுமுருத்திரசிவசங்கராமல பரமவென்று-சந்
ததமுமுனைப்போர்களியரன்றேயிறைவனுக்குத் தகும்பேரன்பர்.

செஞ்சடையோன்றெய்வவிழாச் சேவிப்போரங்கவற்குச்செவ்வி
மாறு - மஞ்சுவைசூ ரமுதுதக மளித்துளோர் சிவாலயங்க ளிலம்
போற்றத் - தஞ்சமெனச்செய்வோர் செய்விப்போர்கண் டுளமகிழ்
வோர்சைவநீதி - விஞ்சுசிவனன்பர்தமைப் பூசிப்போ ரீசற்குமிகு
ந்தநேசர்... ... ... ... ... ... ..... ... ... (௱௨௭)

சிரமீதுங்களமீதுங் கன்னமீதும் புயத்துஞ்செங்கைமீது - முர
மீதுங்கண்டிகைகயைத்தரித்துளோருபவிடதத்துற் றோர்வெண்டும்-
வரமீயத்தக்கசதவுருத்திரமந்திரநவில்வோர் மறைகட்கெல்லாம்-ப
ரமீதெஞ் றணருமெழுத் தஞ்சுமுனைப்போர்கள்சிவபத்தராவார். ()

எந்தைபரன்றனைநோக்கியுய்யானந் திருக்குளங்களேற்றகூவ-னந்
தவனம்பலசெய்வோர்செய்விப்போரருட்சைவநற்றனத்துச்சிந்தை
மகிழ்வுடனுறைவோருறைவோர்க்குவேண்டுவனசெய்வோரீச.னந்த
மிலாவடியவர்தம்மேவல்பணிவிடைத்தொழிலோரானுக்கன்பர்...*

அரியயரேமுதலானபுத்தேளி ரனைவரினுமழியாவீசன் - பெரிய
னெனவுணர்ந்துளோரங்கவன்றன் னாமத்திற்பெரியோர்பேணற்- கு
ரியவுருத்திரபரமவமலசிவ சங்கரவென்றுளக்குமிந்தத் - தெரிவரி
யதிருநாமம்பெரிதென்போர்சிவலோகச் செல்வராவார்... (௱௩௰)

அறையுமறைப்பெரும்பற்றப் புலியூரிலன்பினரன் பகன்றேரே
னு - முறைபவர்களங்கவர்க்குத் தாரத்துமணித்திருந் துமுதவத்தக்க
நிறைவுபெறும்பொருளீவோர் சேயதேயத்துறைந்து நிறைந்தசெ
ல்வப் -பொறைமலியம்பலங்காணுங்காதலுடையோரொம்மாற்போ
ற்றுந்தொண்டர்... ... ... ... ... ... ... ... (௱௩௧)

அடுத்தமணியம்பலத்து ளானந்தத்தாண்டவஞ்செய் தருளுந்தா
ள்க - ளெடுத்தபிறப்பிடை யொருகாற் சென்றடைந்து கண்டுளோ
ரொன்றுங்கண்டோர் - வடுத்தவவித்தலந்தன்னி னன்புள ரன்பிலரே
னுமாய்ந்துளோர்கள் - கடுத்தகமைபெறவிளங்குங் கண்டெத்தெம்
மண்டர்பிரான் கனைத்துளோரால்... ... ... ... ... (௱௩௨)

அருவினைசெய்யாதீசனடியவர்பூசனைதவறுதான்றோட்கண்பாய்த்-
திருநடங்கண்டவ்வுருவஞ்சிந்தனைசெய்தருணுமஞ்செப்பிச்சைவ-ம
ருவருமந்திரம்போற்றிச் சிவஞானத்துடன்றில்லை வைகிமாய்ந்தோ-
ரொருமைதிகழன்பர்களினுத்தமரினுத்தமரொன் றுலைக்கற் பாலோர்

யாழுணர்த்தவிம்மொழிக்கோ ளையமிலையையமிலையாழுன்கூறுந்
தோமகன்றவுடையாள னுடையோரலாயடைந்தவர்பாற்றுணுக்கமெ
ய்த - வேயமுறத்தண்டங்கள்புரிதலொழிவாயுன்றனைவற்றாதர்-தா
முணரவித்தகைலமைதனிலொன்றுங் குறையாதுகாற்று வாயால்.( )

பரவுபலசாதிகள்பல்லாச்சிரமத் தோர்மறையைப்பழித்து ளோர்-
கள் - விரவுருறாய்க்கெடுத்திடுவோர் பதிதரிழிகுலத்தர்முதல்வியன்
பசுக்க - ளரவுபுழுக்கரங்கருமாப்பாதவஞ்சூர்கொடிபுன்கூழாதி தில்
லைத் - தலமருவுசராசரத்திவினையுடைய வெனினுநீசார்வா யல்லை.

அத்தகையதேதென்றுவினவுதியேற்றில்லையிடத்தியாரும்யாவு-மெ
ய்த்தகையசிவனுருவாய்விளங்குவர்கள்பரமனுக்குமிக்கநேசப்-பத்த
ரிவைகொண்டியானுமரியபரும்விண்ணோரும் பணியத்தக்கோர்மொ
ய்த்தவிடமேலாயுன்னாற்றீண்டரியர்தூதர்க்குமொழிவாயென்றான்.( )

அருளுடையா னணிக்கயிலைக்கோயினாயகஞ்செய்யு மண்ணல்பா
சத் - திருளுடையக்கருணைபொழிநந்திவானவன்மொழிகேட்டிதைக
யந்தன்னின் - மருளுடையவணங்கிடைக்கொண் டங்கவனின் றுறை
யான்மன ளைப் போற்றித் - தெருளுடையீ விநின்புறமே தூதரொ
டுந்தனதுலகஞ் சென்றுசேர்ந்தான்.......................(௱௩௭)

சிற்றைமகிழன்புடையசயிமினிவ னன்மதன்றன்செய்கை யிக்க-
மற்றனைமீங்கிநுநிலைக்கு வகுத்துரைத்தோமாதலான்மன்றுளாடு-ம
ந்தமிலாப்பதங்கண்டோர் சிவகதியையடைகுவரொன் றறைந்தா னொ
ன்றுஞ் - சந்தநெறிமறை நூலைத் தலைக்கண்டிங் குலகளித்த தவந்
தோர்சிங்கம்.........................................(௱௩௮)

நன்மதச்சருக்கமுற்றும்.

{பாயிரம் உட்படச்சருக்கம்-மூன்றுக்கு
திருவிருத்தம்—௨௱௨௰௬.}

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்;

மூன்றாவது

# துச்சகச்சருக்கம்,

(கலிவிருத்தம்.)

பற்றொருக்கதிபற்றிய துன்மத-னற்றவச்சரிதத்தை நவிற்றினஞ்
சொற்ற தீவினைத் துச்சகன் முத்தியி - னுற்றவா றிங் குரைக்கலுற் று
மரோ...................................................................(௧)

சொன்னமாக்கதைகேட்டுத் துளக்கிய-செல் வமாதவன் சிந்தையி
ற்பேரரு - டன்னை நோக்கியத் தாபதர்சேகர - வின்னமோர்கதைகே
ளென் றியம்புவான்.......................................................(௨)

துன் றுஞானச்சுடருருவங்கொடு - மன் றுளாடுமலர்ப் பதங்கண்ட
வ - ரன் றியுந்தில்லையம்பலவெல்லையிற் - போன் றினோரும் பொருந்
துவர்முத்தியே.........................................................(௩)

அறந்தவா நெறியாளையயில்லையாற் - றுறந்தபாசச்சுருதிப்பரம்
பொருள் - சிறந்துவாழுடைத்தில்லையினெல்லவா -யிறந்துளோர்மு
த்தியெய்தினரெண்ணிலோர்... ... ... ... ... ... (௪)

ஆய்ந்தமாமறை யம்பலவெல்லையின் - மாய்ந்துளோ ரொருவன்
றெய்வமாதவ - வேந்தர்போற்றவிளங்குஞ்சிவபதஞ்-சேர்ந்தநற்செ
யல்செப்புவன்கேட்டியால்... ... ... ... ... ... ... (௫)

தொலைவிலாதவினையைத்துகள்செயு - மூலகமூர்த்தவத் தோர்களு
ரும்பருங் - கலைஞரும்புகழ்காவிரிமாணதித்-தலைவிளங்குந்தவிச்சை
யமால்வரை... ... ... ... ...... ... ... ... ...(௬)

கரியைப்பொருமரியின் கணங்களு-மெரியுநெஞ்சத்தெயினர்குழாங்க
ளும் - விரிகதிர்ச்சுடர்மேவருங்கானமுந் - தெரியின்மிக்குள செப்
பியவக்கிரி... ... ... ... ... ... ... ..... ... ...(எ)

அக்கிரிக்கணமர்ந்துறைவோனெடுந் - தொக்கவல்வினைத்துச்சக
னிச்சகத் - தெக்கொலைத்தொழிலேனுமியற்றிடத் - தக்கவஞ்சச்சவ
ர்குலத்துளோன்... ... ... ... ... ... ... ... ...(அ)

செய்தவத்திற்றேடறந்தீத்தெழு - வெய்தின்மிக்கலடவை யிருங்
கொலைப்-பெய்துலாவும்பெரும்புயல்விஞ்சிய - கைதவம்பெருகுங்
கடல்போன்றுளான்... .........................................(௯)

கோலமாயகொடியோன்கொடுமையாற் - காலன்மாதவர்போல்வ
ன்கனல்சொரி - பாலநேத்திரன்முன்னம்பருகிய - வாலகால மகிர்த
நிகர்க்குமால்... ... ...... ... ... ... ... ... (௰)

உன்னருங்கொடியோரினுயர்ந்தவன் - றன்னியற்கைதனையித்தரா
தலத் - தின்னவாறெனயாவர்க்குமாதவ -முன்னரன்பின் மொழிந்த
னமில்லைபால் ... ... ... ... ... ... ... ..... (௰௧)

எல்லவர்க்குமியம்பரிதன்றிபு-மொல்லைகேட்கவுமுத றுகேட்பினு
ந் - தொல்லைவல்வினைத்துச்சகப்பேரிறு - லல்லன்மல்கிய வச்சமளி
த்திடும்.................................................. (௰௨)

செல்லுநீணெறி செல்லாநெறியிதென் - றல்லல்கூறி யருந்துணை
போனடந் - தெல்லைபானவிடத்தவர்கைப்பொரு - ளொல்லைகொண்
டங்கொளிக்குமியல்பினோன்.................................. (௰௩)

பிணிபுவேனெனைப்பேணுமென்றியாவருந்-துணியுமாறுரடித்த
னன்சொற்சொலா - வணியர்போலவமர்ந்தணியாடக -டணியவஞ்
சந்தனிற்கொண்டகல்வனால்................................. (௰௪)

கொற்றவாளிகள்கோதண்டங்கொண்டமல்-றுற்றவெஞ்சுரந்தோ
ற்றித்தனிநெறி -யுற்றபோதினுயிருடன்கைப்பொருள்-செற்றுவாங்
கிச்செருக்குந்திறலினோன்.................................... (௰௫)

[-அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.]

வேறு.

புரிநூற்சிகையுத்தரிகமுடைப் பொலியமறையோர்வேடங்கொண்
டருநூன்மறையோர்பாலதிரியவரோடிசிலருந்திவழி -வருநீர்மை
யினுஞ்சிலைத்தோர்போல்வைகியெல்லின்மனைவளங்க - ளொருநீர்மை
யிற்பார்த்திரவினெடுத்தொளிக்குங்களவையுரைப்பாரார்......(௰௬)

அழிந்தவேந்த னொருவன்சேயாகவியம்பிக்கண்களனீர்-வழிந்து
சோரநெட்டுயிர்த்துவாடிமனித்தருவர்முன்னங்- கழிந்தசெல்வம்வ
ரும்வந்தானாட்டோர்கைக் கொண்டுய்ப்பனென - மொழிந்துதங்கு
மிடத்துள்ளவெடுத்தகளவுமுடியுண்டோ...................(௰௭)

முன்னங்கரவின்வருமணியும்பணியும்விற்கமுயல்வணிக -ரெனவ
வணுகிக்கொள்வோர்போலுள்ளதெல்லாம்வினவியவர் - தன்னைநட்

பிணிடைப்படுத்தித்தகுதிபாவித்தங்குள்ள - பொன்னுமணியு மூளக
ளவுபுரியுஞ்செயலோ தரிதரிதால்........................ ... ... ....(௰௮)

வித்திங்குளவோ வேருளவோ விலைக்குவேந்தர் கொடுங் கோலா-
லெப்த்திங்கடைந்தேனின்னலு ரின்ஞர்வகையுளேனென்று-சித்தங்க
ளையவேளாளர் திறம்போலொழுகிநண்புடையோர்வைத்தபொருள்
களைப்பித்தொளிக்குங் களவையுளைக்கவல்லாரார்...............(௰௯)

அறங்கள்புரியுந்தீவினைநோய்க் கஞ்சுநெஞ்சத்தருள்கூரு - மறங்
கடவிருமெனமுனிவர்வடிவாலுண்டி தவிர்விரத-ட றங்கலின்றி யாற்
றியுறைந்தூடையமனையிற்பொருள்கவர்ந்து - கறங்குபோல விரைந்
தகன்றகளவுபுகலிற்கரையுளவோ......... ...................... (௨௰)

தலமாவிகந்ததுறவினர்போற் றண்டமுண்டத் தயங்கநிலம் - வல
மாயினநற்பதியுளதுவணங்கப்பேற்றேன் தீர்த்தத்தின் - குலமாடின
னிங்கோ ரொடுக்கங்கொடுத்தா லிருப்பே னெனவுறைந்தங் - கலமா
மனையொருறத்தனங்கள்கவருஞ்செயலோ வறைவரிதால்......(௨௧)

களவோகொலையோவஞ்சகமோ கருதியுளைக்கிலிவண்புரிந்த- தள
வோவில்லையென்சொல்கெமர்தோவந்தோ நல்வினைக - ளுளவோயா
துடிலைக்குறவருடையமகளிரொயிறுநறுந்- தளவோடிகலுஞ்சையகி
ரிதன்னின்னின்ன தலைகயுறைநாள்....................... .........(௨௨)

எந்தத்தவங்கண்முயன்றாலு மெந்தக்கருமம்புரிந்தாலு - மந்தக்
கொடியதீவினையையாற்றற் கெளிதோ வாய்ந்துணர்ந்து - சிந்தை
க்கினியோர் துயரொழிக்குந் திறனேபோலவாங்கவனே - முந்தைத்தி
கழ்நல்வினைமுயங்க விளைத்தசெய்கை மொழிகின்றாம்... ... (௨௩)

நாகர்தருநேர் நந்தனங்களைரலைவாவிநந்தனங்கண் - மாகமிடைபொ
ன்டானங்கள் வளருந்தருமதானங்கள் - யாகமறைசேர்தந்திரங்களிக
ல்வாள்வேந்தர்தந்திரங்கண்-மேகமகரமலைநாடுவேலைமருவுமலைநாடு.

அயலார்சோலைமுருகவிழா வணியார்வலைகண் முருகவிழாப்-புய
லாடியபொற்கோபுரங்கள் பொன்சூட்டணிபொற்கோபுரங்கள் - விய
லார்வயலோமிகப்பணிலம் விருந்தேவானமிகப்பணில - மியல்பாய்
விளங்குங்கலைவேத மில்லாதனங்வகலைவேதம்... ... ... ... ...(௨௫)

வரைமிக்கெழுமம்பொழிகடங்கள் வருமாதங்கம்பொழிகடங்கள்-
பூரவைத்திருவாழ்மனைமணங்கள் பயிலும்பொழில்வாய்மனைமணங்க

ன் - விரவிச்சிறந்தவண்டினங்கள் வீணையகலா வண்டினங்க - ணுரை
யிற்பொலிவோர்மாதிரங்க ளுயர்நூலொலியேமாதிரங்கள்... (௨௬)

அந்தநாட்டிக்கலங்கார மணி மாமணிசேரலங்காரந் - தந்ததறமே
நாடகங்க டழைக்குமருங்கு நாடகங்க - ணந்தூங்கொடியின்மாகக
ன நண்ணிநெருங்குமாககனம் - விந்தைகலையாண்மலைவஞ்சிவிளங்கு
ம்புகழாண்மலைவஞ்சி.......................................(௨௭)

உரைசெயிந்தப் பதியுறையோ ரொளிர்வேளிங்காத் தனியுறை
யோ - னரவுவாழ்த்துமருங்குடையானமரர்போற்றுமருங்குடையா
ன் - பரவைமருவுதாலத்தார் பரவற்குரியதாலத்தார்-விரவுதிருவாழா
கத்தான் விறல்வேளனைய வாகத்தான்... ... ... ... ... ... (௨௮)

கலியினீடிவரவேலான்காணுர்க்கடிந்தவரவேலா - னிலவுறுதல்வா
ழ்பூதியினுனெருங்கிவளரும் பூதியினு - னிலகுவீரவாரணத்தானெ
ழிலியனையவாரணத்தா - னுலகமுதவுமம்புயத்தா னுவப்பப்புவியா
ளம்புயத்தான்... ... ... ... ... ... ... .. ... ... (௨௯)

இறைவர்சைவ வாலயத்து ளியற்றுப்பணிகள்யாதுமிலை - திறை
கொளளாமன்னரிலை செங்கோல்செல்லாத் தேயமிலை - நிறையுமனு
நூல்நெறியினிகழ்த்தா நீதியாவுமிலை - முறையினரசர்தருமத்துள்
முற்றுதனவுமிவற்கிலையால்...... ... ... ... ... ... ... (௩௰)

மண்டலீகர்மகுடசிகாமணியிலொளிகளகல்மினைச் - சண்டசூரகி
ரணமெனத்தவழுங்கழற்காற்றனிவேந்தன் - கண்டிகைவெணீறணிந்து
கருணையமலற்கருளடைந்த - தொண்டர்சரணமுயர் கதிக்குத்துணை
யாநாமிணையில்லோன்.......................................(௩௧)

மறைபிற்பொலியும்புண்டரிகமலர்மேலுறையுமொருகடவுண்-மு
றையிற்படைத்த பகிரண்டமுழுதுந்தன ளுண்டுகிலா - துறைவிட்ப
னையநிலவுபுகழுடையான்கடல்சூழுலகமெலாங் - குறைவற்றிலகவரு
ள்சுரக்குங் கோமான்சேரர்குலதீபன்... ... ..... ... ... ...(௩௨)

[ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.]

வேறு.

வானநாடர்வந் தடிதொழமன்றிடைவிளங்கு-ஞானநாடகவளத்தி
னனவில்தொறுமின்ப -மானசைவநூன்மொழிப்படியருச்சனைசை
வத் - தான்முடிப்பவனவன்பெயர் சபாபதிப்பிரியன்... ......(௩௩)

உள்ளமுள்ளனபகைகளுமூலகினிற்பகையுந்-தள்ளியேனையகுறை
களுந்தணந்திடவருளின் - வெள்ளமாமெனவடகலைதென்கலை விளங்
க-வள்ளியோனியற்சேரர்தமரபுய்ய வாழ்வோன்................(௫௪)

வேந்தர்மந்திரக்கிழவர்கள்விளங்கமண்டபத்திற் - போர்துவாள
ரித்தவிசிடைப்பொலிந்தருளுமையாள்-காந்தன்மேவியகனகமன்றி
டைப்புகழாய்ந்த-மாந்தர்கூறமிர்தஞ்செவிமாந்தவுண்மகிழ்வோன்

காண்டலெய்தினர்போகமுமுத்தியுங்காண-வாண்டநாயகன்பொ
ற்பொதுவமர்ந்தவாளந்தத்-காண்டவற்றொழுங்காதலின் றகைமீ
க்கொள்ள -வீண்டுமெந்திரக்கிழவர்க்குமிசைத்துடனெழுந்து.(௫௬)

முரசமார்ந்தெழவலம்புரிச்சங்கினமுழங்கப்-பரசுபலவியந்துவை
த்திடவந்திகர்பரவ - நிரைசெய்சாமரக்கால்பொரவெண்குடைநிழற்
ற - வரசரொண்ணிலர்புடைவரச் சிவிகைமீதணைந்தான்........(௫௭)

செறுத்தகோபமுந் தழற்கண்ணுந்திறற்கையுங்கோடும் - பொறு
த்துமேனியுங்கறுத்தடல்புரிந்திடநிழலை - வெறுத்துலாவருமேருவு
ம்பலவெனவல்லி-யறுத்துலாவியக்கிற்றினமளப்பிலநெருங்க. (௫௮)

அருக்கனோடியதேரொனவளவிலாவிரத - நெருக்கமிக்குறவூழியினீ
டியவெங்கா - லுருப்படைத்தனதுரகதமுலப்பிலநிலாவச் - செருப்
பொருப்பென விருதருமளவிலர்செறிய... ... ... ... (௫௯)

படிமறைத்தனநடவியபதாகினிபடியிற்-பொடிமறைத்தன மாதி
ரப்பொலிவைவாள்விசும்பைக் - கொடிமறைத்தனவாதித்தர்குருச்சு
டரரசர் - முடிமறைத்தனமறைத்தனகடலொலிமுரசம்... ...(௬௰)

செந்தமிழ்க்கலைவடகலைதெளிந்தவரோத்தத்-தந்திரத்திருமறைய
வர்காபதர்வாழ்த்த - விந்திரத்திருவீதெனப்பூதலமிசைப்ப - வந்தி
றுத்தனன் சுந்தரச்சையமால்வரைப்பால்..... ... ... ...(௬௧)

குடதிசைக்கடலெழுந்தொரு குலகிரியாற்றிற்- புடவியிற்குணதி
சைநெறிப்பொலிந்துசெல்வதுபோற் -றடமிலங்கியசையமால்வரை
யிணையிகந்து - நடவுகின்றது துன்றிய நராதிபனனிகம்......(௬௨)

மூச்சகங்களுமண்டமுமுறையினிற்பயந்த-கச்சகங்கொளாக்கன
மூலகுணமெற்றவிட்டதை -லவச்சகந்தரற்கன்புடைமன்னவன் படை
கள் - டுச்சகன்களவாசையாற் சோர்வுபார்த்தணைந்தான்... (௬௩)

உரியசூத்திரனிவனெனவுருக்கொடுவந்த -கரியநெஞ்சினன்றனை
யடற்காவலனேவல் - புரியுமாக்களோர்பொன்பொதி சுமைபுடைத்
தேற்றிப் - பெரியகாவலாவிவன்றனைப்பேணினர் சென்றார். (௬௪)

அன்னபோதவனிச்சுனை துறந்துநாமகன்றூற்-றுன் ஞமன்னவர்
புடைத்திருந் துயரமேசெய்வர்- பொன்னினீள்சுனைசேர்விடைக்
கொணர்ந்துபோவதுவே - தன்னலத்தெனமகிழ்ந்திட நாடியேவந்
தான்......... ... ... ....................... ....... (௪௫)

ஆய்ந்தமெய்ப்பொருண்மாதவ ரடர்த்தவெம்புலனைக் - காய்ந்த
டர்த்தவைசெல்வழிக்காக்குமாபோல -வேந்தனேவலர் துச்சகலினை
விலில்விடாமற்-போத்துகாவலேமேவினர் விரைந்தனர்போனூர். ( )

பாகமண்டகோளதையறப் படைபுடைநெருங்க - வராகமீசனே
யன்பிமற்றுபலிலாதருள்கூர் -நாரதலாதியஞ்சராசரஞ்சராசனச்சயி
லப் - புராரிதன்வழிவாங்கிய புரிக்கபலதீத்தான்......... ......(௪௭)

பைவருசேவங்கதிந்தெளிதுணைக்கவும்பரிமே - பெய்வறுனென
வருமதமெரிபெழவிழித்த - சைவநாயகன் சதுமறைநாயக னென்
ஞுத் - தெய்வநாயகனடம்புரிதில்லைமாநகரம்......... ......(௪௮)

புண்டரீகமுந்திசைமுகம்பொலிந்தவாரணமு -மண்டுபேரொளி
யன்னமுமயலர்ந்தசொற்கரும்புங் -கண்டபல்பொருட்டோற்றமுங்கா
ட்சியுங்கவிஞுங் - கொண்டிநான்மறையவனெனக் குலவியபழனம்.

கோடுதாங்கலானேமிமேற்குலவலாற்குலப்புள் - ஞுடுமேவலால்
ரியாவத்தனுவும்பர்-நாடிசிழ்ப்படவோங்கலாற்பசுமைநன்னூலா
னீமமாலெனப்பொலிவன நெருங்குதண்டலைகள்........ .... (௫௦)

அளியுமேனிறைபுளகமு மலர்முகமுங்கட் - டுளியுமட்டுக ளின்
மையுமீரமுந்துவன்றிப் - பளிகருங்குமப்பயோதரி பணிபுமெய்ந்
ஞுன - வெளிநடந்தொழுமன்பரின்விளங்குவபொய்கை......(௫௧)

ஆரூநாயகம்பிதில்லையினணிபெறுங்கோவின் -கேருநலாவுறவளமொ
ழுகினர்மதிலண்ட - கோளமீதுறச்சோழிகள்குலவியநேமி-வாளமா
ல்வனையேழுள வெல்லைமாணும்.......... ................(௫௨)

வரவெற்பொராவாயிதோறலைந்துருமிறவாக் - காமரித்தலத் துள
தெனத் என்பருகருனத் - தாமனாத்தவிகுரைபவன் பற்பலசனத்
த - சேமமேமருவிற்சிறந்தபொற் செறிந்தகோபுரங்கள் ......(௫௩)

அடர்ந்தவண்டமூடிடைவிடா தணைந்தகோபுரத்தை - நுடங்கு
கேமொடும்வாயிலினுழைந்துபோதுவஸ்வான்-மூடர்ந்தநீணெறி
விலகிமுன்சூழ்வனல்லாது - கடந்துபோகவும்வல்லரேதெழுபரிக்
கதிரோன்........................... ... ... ....... ......(௫௪)

தேறுமாகரும்பரம்பையர்தொகுதியுஞ்செறிய - வேறுவேறதிர்மு
ந்கமுழமணிகளும்விரிந்து - மாறுமாறெதிர்விளங்கலால் வயங்குநாக
லைகப்பே - ராறுபூதலத்தணைந்தமை யனையவாவணங்கள்......(௫௫)

முத்தியாவதுதில்லையம்பலமெனமுயங்கும் - சித்தமேவியவான
வர்சிறப்பினுழைந்து - வித்தகத்துடன்றத்தமவிமானங்கணிறைத்
து - வைத்தவாமெனப்பொலிவன மாடமாளிகைகள்........(௫௭)

துங்கமாளிகைவெண்சுதைச் சோதிநாற்றிசையும் - பொங்கிமீது
சூழ்ந்திலகிய பொலிவுமான்மழுச்சேர் - செங்கையான்வடிவாகியசி
வகங்கைதனைவான் - கங்கைமாநதிவலம்வருங் காட்சியைக்கடுக்கும்.

மொய்த்தபேரொளிப்பரிதிதேர்முயங்கியபரிமேன்,மத்திகைக்கு
ழாமெனப்பொலிமாடவெண்பதாகைப்-பத்திதாக்குதலொழிமறத்
தொழில்புரிபாகன் கைத்தலத்திலுக்குதவிசெய்நலத்தினைக்காட்டும்

அரங்கலைத்துறைமேவெள்ளிபோ ரளப்பருமிரதங்- கருங்களத்திறை
விழாவிலிற் சுழிமணிநெடுந்தேர் - மருங்குசூழ்தரு வானவர்விமா
னமெண்ணறுங்-னெருங்கியிவ்வகைத் திவையென நினைக்கவுமரிதால்.

நிலவவாணுதலரிவையர்தேவர்தந்நெருக்கிற்- குலவுமாமுடியுதிர்
மணியலகிலங்குப்பை - யுலகநாயகனம்பலங்காணியவுவந்து-தலைவு
வப்பரியருடன்றலைமயக்குறுமால்.................. ......(௬௰)

ஒன்றிலாதவைப்புலன்வழிக்கடைபடாதுலவை - வென்றமாதவர்
பன்றிடைநடந்தொழவிலைந்து- தன்றுமன்பொடுசெல்வழிச்சுரர்
முடியிடைவீழ்- மன்றன்மாலையேவழியிடைதடுப்பனமறுகு.(௬௧)

நிரைகண்ணல்பான்மலைமகள்செறிந்தமைநிகர்ப்ப - மாடுயர்ந்தபே
ரட்டலங்காரியும்வடபாற் - கோடுகொண்டெழினிழலுமிழ்குலவி
யவட்டில் - ஊடுதங்கியபசுமையுங்கலந்துநின்றொளிரும்...(௬௨)

பரியமீதுயிழ்வடத்தருவயங்குறவெறுக்கைப்-பொதுவெழூஞ்சுட
ரண்டமேய்பொலிவதோதியமுங் - கதுவுகேழலுமாயயன்கண்ணன்
மூன்றேட - முதிருநீடொளித்தழற்பிழம் பென்னலா மொழியின்.

திருநடந்தொழுவோர்சிவமாகிய செயல்போ - லருளிலங்கியவம்
பலத்தாடகத்தொளியா - விருபெருஞ்சுடர்த்தாரகை யெழிற்சராச
ரங்கள் - மருவியுள்ளனதமணியவடிவமாய் வயங்கும்.........(௬௪)

விழைவுகொண்டணைவிண்ணவர் மகுடகோடிகளின் - மழைவுகொ
ண்டெழுகற்பகத்தமணியமாலை - யிழைநெருக்குறவீழ்வனபொற்ற
ல்மெனப்பொன் - மழைமுகிற்குலமொழிவறப்பொழிவனமாலும்.

எண்டலத்துறுகடவுளரிழைத்திடும்யாகத் - தண்டிவேண்டியவன்டர்தம்மேனியோ வொளியே - கொண்டவங்கியின் கொழும்புகையைண்டகூடத்து - மண்டலாற்றெய்வநதியமுமாகுதிமணக்கும...(௬௬)

படைப்புறத்தினை மறைப்பன பணிலங்கள்பழன - மடைப்புறத்தினைமறைப்பனமணிமுத்தமைந்தர் - தொடைப்புறத்தினைமறைப்பனதும்பிகண்மறையோர் - கடைப்புறத்தினைமறைப்பன கடவுளர்தொகுதி... ............ ... ... ... ........................(௬௭)

நெடியமான்முதற்கடவுளர் நிறைதலாலறையும் - படியிலாமையான்மகத்தொடு நயம்பரவுதலான் - முடிவிலாமையானற்கதிதருதலான்முடியா - வடிகள்வாழ்தலாலரணமனையதந்நகரம் .... ......(௬௮)

(கலிவிருத்தம்.)

[வேறு.]

நிறையுமுணர்வுந்திருவுமறமும் - மறையுமகமுமறுகும்மணமும - பொறையுந்தவமுங் கொடையும்புகழும் - மிறையுமுயிரும் மெனநின்றிலகும்...... ........ ... ..... ....... .........(௬௯)

அருளம்பலமீகடர்பொற்சடரா - விருள்வெம்பகலென் றிவைகண்டிலமா - உருவும்மருவும்மொருவும்மொருவன் - றருமெய்க்கதியெப்பயனுமித்தலனே... ......... ................ ..... ......(௭௰)

மூவாயிரமாமுனிவோர்முடனுந் - தாவதமகந்தவிழுண்டுபொருந் - தேவாடல்பயிந்தருள்சீர்நகரந் - தோவாதகழிப்பினரும்பொலாம்........... ....................... .....................(௭௧)

எங்கும்மறையெங்கணுமாகமமே - மெங்கும்மகமெங்கணுமர்ச்சனையே - யெங்குந்தவமெங்கணுநீளறமே - யெங்குந்திருவென்றுமிலங்குறுமால்... ........... ......... .................... ......(௭௨)

நீடுந்தவமுந்திருவும்விழியிற் - றேடுங்கழியுந்திகழ்மன்றிடைநின்றாடும்பதமென் றறிவைச்செறியக் - கூடுந்தகையோர் குணமென்றுயிலோர்.................................... ... .... ...(௭௩)

வற்றாவினைசெற்றுயர்மாதவமே - யுற்றாருமுறுதொளிமொண்கதிவா - னொற்றுவியமன்றெதிர்பார்வையினிற் - பெற்றாரினியோர்பெறுபேறுமிலார்........................................ ... ...(௭௪)

கொன்றுருயிருண்கொடுவெஞ்சமனை - வென்றாழியாவிரதத்துயர்வோர் - மன்றுமலர்ப்பதமல்லதுவே - றென்றுதொளிரும்முனமெய்யுணர்வோர் ...... ... ... ... ... ... ... ... ......(௭௫)

எய்தாதபெரும்பதமெய்திடினு- நொய்தாநினைவோர் நுவன்மன் றுறையும்-பைதாழரவாபரணன்பணியே- செய்தார்வழுறுந்திகழ்வாழ்வுடையோர்... ..... ... ... ... ...... ... ... ...(எசு)

அறிவாரறிவாலறியாநிறையும்- மறிவாரருளாலறிவார்பிறிதொன்- றறிவானமையாதறியாமையிடத் - தறிவாமென மெய்யறிவுடைமையார் ... ... .... ... ...... ... ... ... ... (எஎ)

வேதாகமநூல்விரிநூல்பலவும்- மோதாவுணரும்முணர்வுக்குணரீர்- நாதாந்தநடந்துநடம்புரியுந் - தாதாகமலச் சரணென்றுணர்வோர்...... ... ... ... ......... ... ... ... (எஅ)

சீறுறுகடந்தருளாரணமுந்-தேருந்தொளிர்தற்பரசிற்கனகத்- தூருவுலாவருகாமகிழும்- பேறுறவரிற்பெறுவாரிலரே ... (எகூ)

இத்தன்மையரென்றுடமிருப்பதுமெய் - வித்தன்னருமுத்திவிரும்பினர்சஞ்- சித்தங்கணிலாயதுசித்துருவத் - தத்தன்வழிவாகியதந்நகரம்... ... ... ... ... ... ... ... ... (அய)

[எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.]

[வேறு.]

முல்லைத்திருநகை வல்லைப்பொருமுலை முடியாவுமைதிருவடிபேணத் - தொல்லைப்பழமறையெல்லைத்தனிமுதலுருவாநலமுறுதில்லையங்கண் - டல்லைப்பொருவினைகெல்லுத்தமர்சிறமதுவாநெறியருள்பொருமேவத்- தில்லைத்திருநகர்மல்லற்களியொடுசென்றான் மறுநெறிகண்டான்................................... ... (அக)

குலவெற்பினமருளடையத்திருநகர்குடிபுக்கனவெனமதிமிக்கோர் புலவர்ற்றறிவருநலனிறகிளர்திகழ்பொற்கோபுரமவைமூர்காணு- விலைப்போலனலினிபெறுநற்சிவிகையினிழிபாவருணெறிவழியாயத்- தலையிற்றுகள்வடிவுறமிக்ககமகிழ்ந்தணியப்பரிவொடுபணிவுற்றான். ()

மடமாமகளிர்களுடனுடைவர்களுமறைநாலவர்களுமிறைபாதத்- திடமாகியவறிவுடையாரெவர்களுமியல்பாணருமிசைமூரல்வாருந்- தொடராதரவுடனடராமிருபுகழ்துதியாநிறைகலைமதிகாணுங்- கடலாமெனவருளடலான்மறுநெறிகண்டான்வரவெதிர்கொண்டார்கள்.

அளகைக்கதிபதிவரவோவரமிகுமமராபதியிறைவரவோமெய்த்- துளவக்கருமுகில்வரவோவரவிதுசொல்வாரெனிலெவர்வல்லாரென்- றுளனிற்பயில்கலைபயிவோர்புகழ்தரவொழியாதெழுமருளுடன்வந்தான்- பளகற்றிருவினையகலப்பரிவொடுபணிவார்கதியுறுமணிவீதி.

நிலமாமகளிருமாமாமகளிருநிகழ்மானிடர்களுடிமையோருங்-க
லவாவவரவர்விலகாதுலவியகனகாசலநிகர்மணியாடப் - பலமாமறு
கெதிர்பரவாவிடையிடைபணியாவுபர்புயவணிபோலிவ்-வுலகாளொ
ருகுடை நிழலானருளுடனுற்றனிறையுறைபொற்கோயில். (௮௫)

விதுவாழ்முடியினன் வடிவாமிதுவென விரியாரணமொழி புகல்
வாசப்- புதுமாமலர்விரிமதுவாலுயரலைபொங்கிப்பொழிசிவகங்கை
ப்பான்-முதுவாய்மையருடனருகாமகிழ்வுடன் மூழ்கிச்சூழ்கரையே
நிப்பொற்- சதுவாஞ்மறையவர்பெறுமாறருளொடுதந்தானுலகின்
மிகுத்தானம்... ... ... ... ... ...... ... ... (௮௬)

ஏலப்புலனுறுகாலத்தகத்தொளிர்மெய்த்தாமுனிவரமெய்தப்போ- யா
லத்தருநிழன்மூலப்பதியிடையழியாமுதலெனமொழிவேதக்- கோ
லச்சிகையெழுஞானத்திரளொருகோலத்துடனுயர்ஞாலத்தின்-பால
த்புதமதுவாகிப்பொலிவதுபாராவிழிவழிநீர்வாரா............(௮௭)

அழுதும்புளகமொடுளமங்குருகியுமணியார்படிமிசைபணியாமு
ன்-றொழுதும்பரபதசிவசங்கரவரதொலையாமனமுடனுலகேழு-மு
ழுதுந்தருமொருமுதல்வாநிலைபெறுமுத்தாவலையாறுசித்தாவெப்-
பொழுதும்பதநினைதரநல்கெனநனி புகழ்ந்தருமொளியமிழ்மின்
றான்... ... ... ... ... ........................ ......... (௮௮)

கோதற்றிடவொழுமாசிக்குறிவெதிர் குறுகாவொருஞ்கொடுசெறுநா
ளு - பேதக்கெடுவினைமோதித்திகழ்விடைபெற்றுகமறைகற்றார்
சூழ்-போதப்பரசிவபோதப்பொலிவொடுபொங்காலினிதுடனுற்று
ஞல் - வேதச்சிகையெழுநாதச்சுடரமல்மெய்ந்நிதிநிலவு மெவானோர்
மன்றம் ... ... ... ... ... ......... ... ... ... ...(௮௯)

இருகுங்குமமுலையொருபெண்கொடியுடமொருவன்றிருநடமெதி
ர்காண- மருவுப்புலனொருகரணந்தலைகெடவளரும்புளகமொடுடல்
கம்பித்- துருகுஞ்செயல்பெறவளருஞ்செயலறவுளாபுஞ்சிநிதறவர
மாறு - வருள்கொண்டருவியினிருகணுடனறாவசையாவுயர்பரவச
மானான்... ... ... ... ... ... ........................ ... (௯௰)

ஆறும்பகைபுரியஞ்சுங்கொடுவினையருகாமலமுதலொருநானு
ஞ் - சீறும்பெரியவர்தேறும்பரபதசிந்தாமணியிருமொந்தாய்வெண்-
ணீறும்பகிரதியாறும்புனைசடைநிமலாகமமருள்மலாகொண் - டாறும்
பரிவுடனுவுங்குளமிடவுளமுங்களிகொளவுளைசெய்தான்......(௯௧)

என்பால்வினைகெட நின்பாலருள்பெற விறைவாவருளென வறையா நின்-றன்பான்மிகவுள மகிழ்வாருதன லருளாலொருபடி விடைகொள்ளாப்-பொன்பான்மிளிர்தருநன்காளொளிர்மனை புக்காணிவணிலுமிக்காருண்-டென்பாரிலைபெறுமின்பார்கதியளவிதுவென்றுரை செயயார்வல்லார்............................................(௬௨)

[ஐஞ்சீரடியாசிரியவிருத்தம்.]

வேறு.

தக்கசேரலர்மன்னவன்றன்மையீதிப்பான் - மிக்ககாவலனேவலால் விளாவினர்சூழத்-தொக்கயொர்சுமையெடுத்தனை துச்சகன்றுனுந்-திக்கெலாம்புகழ்தில்லையம்பதியிடைச்சேர்ந்தான்..... ......(௬௩)

படியிலாதவப்பார்த்திபனேவலோர்சுமையைக் - கடிதுவாங்கினர் நற்றவக்கணத்தினப்பதியிற்-கொடியவெப்புநோய்வருநெறிக்கோடலாம்வருந்தி-முடிவிலாவினைமுடிந்திடவாருயிர்முடிந்தான்...(௬௪)

கற்பகாடகமலர்மழைகடவுளர்பொழியப்- பொற்பராகமோடரம்பையர்வரப்பிலர்புகழ- விற்பராவியவிமானமேல்விளங்கியங் கவனுஞ்-சிற்பரானந்தரடையுமச்சிவபதமடைந்தான்......... ....(௬௫)

ஆதிநாயகனுடலைக்கண்டிலனேனுங் - கோயிலாப்பதியதனிடைத் துஞ்சலாற்குறிப்பாப்- பாதகம்புரிதுச்சகன்முத்தியிற்படர்ந்தா-னீதுசத்தியஞ்சத்தியமிசைக்குமாறைவமே..........................(௬௬)

அண்ணலாடலைக்கண்டிலராயினுமுத்தி-யெண்ணில்கோடியர்இறந்துடன்பெற்றவர்வின்னுமு - மண்ணுநாரமூமாருமப்பொதும்பருமெந்தக்- கண்ணுமாய்ந்தவெவ்வுயிருநற்கதியடைந்திடுமால்.(௬௭)

பொருவிறாவப்புணரியிற்புணரொடுமீறே - ரொருவைமுலங்கொணர்ந்ததனிதில்லையெல்லையோர்மரத்தின் - மருவிபக்கயல்கொன்றுணமாய்ந்தவவ்வுயிர்போய்க்-கருசருஞ்பெருமுத்தியைப்பெற்றதக்கணத்தில்... ... ... ... ...... ... .................(௬௮)

ஈதுபோலவிவ்வெல்லையினமலநீர்வானம்- பூதலந்தனிலிறந்துமுன்னற்கதிபுகுந்தோ-ரோதிமெண்ணிலராதலாலாடல்கண்ணுறுமற்-சாதலத்தலத்தெய்தினுமுத்திசத்தியமால்.......... ... ...(௬௯)

பொதுவினுடலைக்காணிலப்புரத்திடைமாயிற்- கதியடைந்திடக்கண்டனங்கடற்றலத்தேந்தப்- பதியினும்பெரிதிப்பதிபகர்விராட்புருட-னிதயபங்கயமீதென விருக்கிசைத்தலினால்... ... ... (௭௰)

கலையிகந்தமாமகிட்சிலையைக்கருத்துறின்மற்றை - யலையலங்களு
றின்னலதாயினுமணியா - நவைபடுந்துயர்கருத்துறினவிலவையவ
ங்க- ளவையுமெவ்வணியெய்தினுமிலகுமோவிலகா... ... (௱௧)

இன்னதென்னமன்றிறைகொளும்பூசையாலெந்த - நன்னெடும்ப
திப்பூசையுநடந்ததேயாகும்- பொன்னினம்பலவாணர்க்குப் பூசை
யின்றெலப்-பன்னெடும்பதிப்பூசையாற்பயன்கள்வேறென்றே. ௱௨

பொருவினுள்ளமோடன்றியேகண்முதற்புலங்க-ளுருவமாதியவி
டயங்களுணருமோவுணரா-கருதுமவ்வுளம்புலத்தொகை கடந்திடா
தெனினு-மருவுதும்பொடிப்புணர்தரவல்லதேயதுபோல்....(௱௩)

வானலத்திகழம்பலவாணனைச்சென்று- காணலன்றிப்பொத்தலங்க
ளைக்காணினும்பயனென் - சேனிலங்குமச்சிதம்பரத் திருநடங்கண்
டா- லானவப்பெரும்பகையறுத்தருளடைந்திடலாம்........(௱௪)

சொற்றதின்னதேற்சுருதிநாயகனிடங்கொண்ட- நற்றலங்களவாவ
தென்னென்னினுன்மறைகண் -முற்றுநாடருஞ்சிதம்பரமூர்த்தியை
க்காண்டற்-குற்றவத்தலக்காட்சிகளேதுவாமுணரில்... ......(௱௫)

ஆதியம்பலங்காண்டலோரருந்தலங்காணற் - கேதுவாகுமோவி
டையமொண்ணிலாமூர்த்தி-பேதமுள்ளனவாணவப்பெரும்பிணக்க
றுத்தோர்-போதநாடியபரசிவப்பொலிவையொப்பாமோ....(௱௬)

ஆயபோலருட்சைவநற்றலங்களினமியாத்-தூயவிப்பெரி துாயதுசு
ருதியாற்றவத்தாம்-மேயசெய்கையுள்ளவற்றிருல் விளங்கும்பொது
வி-னேயநாடகங்காண்டற்குமுயல்வதேயியல்பாம்... ... (௱௭)

எந்தநல்வினைத்தவங்களுமித்தலங்காணும்,பந்தவாவுளமுளசெனி
ற்பயன்பெறுமிலையேன்-முந்துமப்பயனிலையிலைபுலன்முரண்முருக
குஞ்- சிந்தையாதவவின்னருஞ்செப்புவன்கேண்மோ......(௱௮)

[அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.]

வேறு.

இத்தலமமர்ந்துமன்றுளிரும்பதங்காணமுத்தி - சத்தியமென்று
தையஞ்சார்ந்துவேறோர்தலத்தின்-மெய்த்தவப்புரிந்துமாய்ந்தோர்
வீட்டின்பமெய்தலாகார்- நித்தவம்பலத்துள்ளானை நிந்தைசெய்கை
யினலம்மா... ..... ... ... ... ... ... ... ...(௱௯)

இருடருபோரவத்தையிறுதியினியந்தன்னிற் - கருவிகளொடுங்
குமாபோற்கருதியபதிகள்யாவும்-பொருவரும்புண்டரீகபுரத்திடை

பொடுங்குடீச- னுருவமாயினுமெஞ்ஞான்றுமொடுங்குறுதன்மை யாமால்... ... ... ... ... ... ... ... ... ...(௱௰௧)

எப்பதிகளினுமுள்ளவிறையருண்மூர்த்தியாவுஞ்- செப்பருஞ்சிதம்பரத்துட்டிருவாகதிபாமந்தன்னி,லொப்புறவடைதலானுலுனாக்கு மெக்காலத்துள்ளு மப்பெருங்காலச்சேவையதிகவுத்தமமாமென்றே

ஐவகைத்தொழிலுக்கேற்றவைவகைக்கடவுளெல்லாந்- தெய்வதவடிவமானசிவபரன்வடிவதாகு- மெய்வளர்தில்லையெல்லைவிடாமலங் குறைகின்றானெஞ்- சைவநாயகனென்றோர்தலங்கண்மற்றதின்வேறுண்டோ... .. ... ... ... ... ..... ... ... (௱௰௨)

மாலயன்முதலாயுள்ளவானவர்குழுவுக்கெல்லா - மேலவன்புராரியென்றுவிரித்திடுஞ்சுருதியாவுந்- தாலமேற்றலங்களிற்சுத் தலத்தினுக்கொவ்வாதென்றெம்-மேருவிடைமத்தமேதமுனைாக்கலாந்தகைமைத்தன்றால்... ... ... ... ... ... ... ... .. ...(௱௰௩)

அதிகமொப்பானதேசரன்றனக்கில்லைதில்லை - முதுபதிதனக்குமிந்தமுறைமைவாதேனவேணி- மதியவற்கொப்பென்றுள்ளுானத்தரோபதிதொந்தப்-பதியுமிப்பதிக்கொட்பென்னும்பதகருப்பதிதராவார்...... ... ... ... ... ... ... ... ......(௱௰௪)

ஒதுபன்னெறியுள்வேதவொழுக்கமேயுயர்ச்சிறுத்தி- சாதனம்பலவுட்பூதிசாதனந்தலைமைவெற்பின் -மாதொருபாகற்கேற்கவழிபடுப்பூசைதன்னு-ளாதரமவன்றனன்பர்க்கன்பினிலளிக்கும்பூசை...()

வேதமந்திரத்துட்போதமிகுஞ்சதவுருத்திரம்பே,ராதிமந்திரத்திலு,டிமஞ்செழுத்ததிலெமன்று- மேதமிலறங்களாதியிந்திமிவிரசந்தன்னிற்-சீதரன்முதலோர்பேணுஞ்சிவார்ச்சனைபெரியதாமுப் (௱௰௫)

வருணமெண்ணிலவுள்வேதமமறயவருநயர்ந்தோர்நீறு- யருளுமாச்சிரமத்துள்ளுட்டிறர்தவரதிகாலப்பு- பெருகியவறத்திற்கொலலாப்பேறப்பெரிதுறன்று- தருபவரவருட்டக்கதேசிகர்தலைவராவர். ()

பற்பலஞானந்தன்னுட்பாசிவஞானமேலாம்-பொற்புறுமிவைகள்போலப்படவிமேற்பதிக_ம்முட்,கற்பனையில்லாஞானககனமென்றிருக்கோலிட்ட-வற்புதங்கொண்டதில்லையம்பலமதுகமன்றே(௱௰௮)

புகழுறும்புண்டரீக புரத்திலுக்கெந்தஞான்று - நிகரதிகங்களில்லைநிகரதிகங்களாகப்- பகர்பவனுடனோர்வார்த்தைபகர்ந்தவன்பாவிவேதஞ் - சகலமுமுணர்ந்துந்தேருன்றன்றந்தைதனையனல்லன். ()

போகமும்வீடுமென்றுட்புனிதனைக்கண்டாலன்றி - யாருமோபதிக
வின்கணுற்றியவறங்கணித்து - மாகமார்புரிசைத்தில்லைமாநகர்நோக்
கியன்பா-லேகுதிமுனிவமூர்த்தியெதிர்ந்தவப்போதேயெய்தும். ()

பத்தியுநியமத்தாறுமுயற்சியும்பழுதொன்றின்றி - முத்தியமூர்த்தி
நல்குமூழுமுகமறுநீங்காச் - சத்தியுஞ்சிவமுமானதனிச்சுடராடல்க
ண்டு - வித்தகவீடுகாண்டிவேறிதற்கையமின்றால் ...... ......(௱௨௧)

பேறிலையென்றுரைத்தபேதமைதன்னுவற்றோர் - மாதிலாநினை
யந்தன்னின்மாரவுரவத்தைச்சேர்வர் - தேறுதிமுனியவென்றுசெவித்
துணைகளிப்பவன்பாற் - கூறினன்புராணம்யாவுங்கூறியகொள்கை
மேலோன்........................... ... ... ... ...............(௱௨.௨)

ஆச்சகச்சருக்கமுற்றும்.

பாயிரமுட்படச்சருக்கம் - ௪-க்கு -
திருவிருத்தம் — [illegible].

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

# நியமச்சருக்கம்

[அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.]

சார்தொழவீடுபெற்றவாச்சகன்சரிதந்தன்னில் - விரவிமுன்னறி
ந்தவாறுவிளம்பினமிப்பாலிப்பார் - பரவியதொல்லைத்தில்லைப்பதியி
டையுறைவோர்தங்கள் - வாய்நியமந்தன்னைவகுத்துரைசெய்யலுற்
றாம்... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... (௧)

சலமகன்முனிவன் கூறச்சயிமினியிவைகளெல்லாங் - குலமறைப் பொருளேநீறிகொண்டதேசிகரன்பெய்தி - நலமிகுமெலையுமென் றுநவிற்றுதல்கட்டனேயாவிங்-கலமுறவுரைத்தாயொன்றுமடியனேற் கையமின்றால் ... ... ... ... ...... ...................... (உ)

ஞானதேசிகர்களுண்மைநவின்றிட்டிவிதனுக்கைய- மானவர்பதித ராதலிசயமன்றேதில்லை, மாணகருறைந்துவாழுமாசிலாநியமமன்பு ளானுறவருள்செயென்னத்தவமுனிசாற்றலுற்றான்... .........(௩)

யாதொருதேயந்தன்னிலிருப்பவரில்லையெய்துங்- காதல்கூர்நிய மங்கொண்டுசிவார்ச்சனைக்கடன்பண்முற்றி- மாதவர்மறையோர்க்கே ற்றவர்த்தனைபுரிந்திறைஞ்சி - யாதரமல்கப்போற்றியவரருள்பெற்ற பின்னர்... ...................... ... ... ............ .... ......(௪)

கட்டுறுகாமமாதிகட்டறவிட்டுவெட்டைக்- கிட்டிமற்றியாரிடத்துங் கேண்மைகூரடிசில்கொள்ளா - தட்டதன்சொன்றியென்றுமிசைந்த யலார்தங்கையி- னெட்டுணைப்பொருளுங்கொள்ளாதிறைபுகழ்பரவி யெய்தி.......................................... ........ (௫)

சென்றுலகத்துண்மிக்கதில்லையம்பதியினெல்லை - தான்றியங்கற் றையுண்டிதுறந்துமுண்டிதமுமெய்தித்-தன்றுணைக்கங்கையாதிசே விக்குந்தகைமைபூண்ட-பொன்றருபுண்டரீகப்பொய்கையைக்கண் டுபோற்றி............ ... ...................... ...... ... .......(௬)

அன்புடன்முழ்கியேழ்பெருட்சிவலோகத்திற்றன்-றென்புகழ்க்கிழ வர்வாழச்செய்வனசெய்தேயஃகம்-பொன்புலிகன்னியன்னம்பசுத் ருதில்புகன்றதான-மின்பொலிசடையாற்பேணும் விளங்குவேதியர் பானல்கி......... ... ... ... ... ... ... ...... .... (௭)

ஆறுவெம்பகையைநூறியருடருமஞ்செழுத்தை- நூறுடனென் னாலம்பானுவென்றபின்மறைகளின்னுந்-தேறருங்கருணைச்சோதித்தி கழ்திருமூலத்தானத்-தூயநேசமேன்மேலுள்ளிடைவளரவெய்தி.

சந்நிதிதன்னின்முக்கால்விதிப்படிதாழ்ந்தெழுந்து - பின்னரும் வலஞ்செய்தைங்காற்பெரும்பயனுறப்பணிந்தங்-கின்னபேருருவஞ் செய்கைகயீதெனவிருக்குமோரப்- பொன்னவிர்கொன்றைவேணி ப்புனிதன்மேன்மகிழ்வுகூர.......... ............... ... ...(௯)

[அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.]

வேறு.

காரணகாரியமாகிநிறைந்துகடந்துவிளங்குபெரும்- பூரணஞான
சுகோதையநாதபுரோசபராதிபநா-லாரணவாரணபேதமளித்தவகண்
டிதவண்டருட-ஞாணனுள்முகஞுடரிதாகியநாதவெனப்பரவா. (ம)

பூதலமாடைகளாடைகளோடைகள்பூண்மழுகுடங்கடவுட் - டாதியர்
கேதனமுத்தணிசத்திரசாமரமின்னமிர்தத்- தீதறுமாமணிதூபம்வி
டாமொளிர்தீபமொழுன்னைபோ-லோதியயாவையுமேதமறும்படி
யுள்வமகிழ்ந்துதவி......... ... ... ... ... ... ...(மக)

தண்ணளிகூரிமவானருள்சுந்தரிசந்நிதியிற்பணியுற் - றெண்ணிய
வின்னமர்நல்கியின்றென்சுகவிங்கிலைவயில்லையெனிற் - கண்ணியவணுவ
ளவாயினுமெஞ்சுகளிக்கவளித்தருள்கூ-ரண்ணலையம்பினுணங்கின
ரன்பரலாதவரன்பர்கள்ளை... ... ... ...... ... ... (மஉ)

யாதுமிலாவொளிவிலைமலராயினுமிட்டுவணங்குதலே. நீதியலாவெ
நிதீநிகொள்கைப்பொருணேர்படமெலாமிலரா- லாதிதருலையமீதி
லைறகுடிய நியவன்நியவண்- போதருசெற்னறமலாதியெடுத்தயல்
போகடன்மாகடனே ... ... ... ... ... ... ... (மங)

ஈதுமிலாவொளின்முன்புரிசாரகரிதையமிகிழ்ந்திடநன் - கோதிவ
ணங்கவலாதுபணிந்தெழலொழிவதுவேகருமம் - வேதமுடிமிப்படிநி
ச்சயமாகவிளம்பியதப்படியே- யாதிநெடுமிம்பதியண்ணல்பதந்தொ
ழுமன்பினரன்பர்களால் ... ... ... ... ... ... ...(மச)

பின்னருமாமகிழ்வால்வலம்வந்துபிறங்கியமூவொருகா-ளன்னிவ
னுடுபணிந்துயர்சந்நிதிநன்கினிருந்தருள்கூர் - முன்னவர்பேணிய
வக்கரமஞ்சுமுயங்கியுயிர்க்குயிரா-மின்னமிர்தந்தமதுள்ளுறறுட
னெட்டுருவேறியபின் ... ... ... ... ... ..... ...(மரு)

நின்றுபணிந்தவ்விண்றுமகன்றருணேயம்வளர்ந்திடமூன்-ஞென்
றறிதானபுலன்கரணங்களுமொன்றினருள்ளொளியா-யென்றுமரும்
பொருளென்றுமறைக்குலமென்றுமுளாதிடமா-மன்றுணடம்புரி
வள்ளன்மலர்ப்பதம்வந்தெதிர்கண்டுதொழா... ... .........(மசு)

என்றுடலென்றுயிரென்றுணர்வென்செயலென்பவிகந்துடை
யோர் - மூன்றுணர்வாகியபேருணர்வென்றுமுயங்குபயங்கமணிப்

பொன்னவைமுன்னர் மகிழ்ந்துதிகழ்ந்துபுகழ்ந்துலகேழுடையா-
யின்னமிர்தேபொருளேயருளேயெனவின்புறுமன்புமிகா.... (௰௭)

ஆலமருங்கதனீழலிலேழுலகாளுமுடையானுறையு-மூலநெடும்பதி
யெய்தியிறைஞ்சியமுறைகுறையாதிவணுஞ்-சிலமுறும்படிதன்னிய
மத்தொடுசேவைபுரிந்தருளோர்-பாலுடையான்விடையானடமாடி
யபதமலரிறைஞ்சிறு... ... ... ... ... ... ... ... ...(௰௮)

நாதபுராதனஞானவரோதையஞானநடம்புரியும் - பாதநிராமய
வாறியல்சிபராபரதத்துவதால் - வேதபராயணசிதரனுபவெற்பரு
ளகற்புமிகு - மாமொருபாலுடையாயெனநின்றுவழுத்திவணங்கிய
பின்... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... (௰௯)

அருள்விடைபெற்றருமாமறைசூழ்திருவாலயமெல்லைகடந்-தொ
ருமடைகொடத்வனடங்கனுறைந்தொளிகதிருதைத்தியெழுந்- திரு
வினைசெற்றியேங்கயவாவியினிதுபடிந்தருளான்-மருவியதானமி
யைந்தனபாதவர்மறையவர்பாலருளி... ... ... (உ௰)

சிதரநாடருமன்றினடம்புரிசேவடிகண்டுடனே - பூதலவானவர்
சைவர்தபோதனர்புந்திகளித்திடமா-முதனல்கிமகிழ்ந்துபுகழ்ந்
தருளுறமேவியெழு - லேதமில்போனகமோனமொடு...டலேயி
யல்பாலுமரோ ... ... ... ... ... ... ... ... ...(உக)

மிக்கதலத்திகழ்புண்டரிகத்தடமீதுபடிந்துடனே-யக்கரமஞ்சை
புநாமமொடுருவங்கனவிற்றிகழ்க் - செக்கர்நறுஞ்சடையானைட
மாடியசேவடிகண்டவர்தா-மிக்கொடுவெம்பவமெய்தவிரும்பிறுமெ
ய்துவரோவிலையால் ... ... ... ... ... ... ...(உஉ)

[அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.]

வேறு.

உற்றவிந்நெறிமுத்தினமைந்தினமோர்பக்கமோர்திங்கள் - மற்
றோராண்டுகம்மோயுயிவொல்லைவளநகர்வைகிச்சீர் - பெற்றவேதி
யர்மாதவர்க்கொருமுட்டிபிச்சையாயினுமன்பா- லெற்றைநாளுமி
ட்டுண்டலேநெறியலாளுண்டலுமியல்யன்றால்... ...(உ௩)

இல்லறத்துடனிருப்பவருந்தமக்கிசைந்தசெய்தருந்தாரோல்-வல்
வினைத்தொகை துய்ப்பவர்நிச்சயமறையெலாம்புகழ்ந்தேத்துந்-தி
ல்லையம்பதிநன்னெறியுறைபவர்சிதம்பரநாதன்றன்-மல்லன்மல்கிய
சேவடிநாடொறும்வணங்குதல்வழுக்காமல்... ...(உச)

அனகமாதவசயிமினிமுனிவர்களும்பெருநியமங்க-ளினதுசெ
ய்கைகண்டொத்தனநீயுமந்நியமங்கடவறுமற்- றினமுரு னமூமூத்
திபுமாகியசிவபரஞ்சுடராடுங்- கனகவம்பலத்தாடலைக்கண்டுகண்களு
த்தினுங்களிப்பாயால்................................... ...(உ௫)

காலைவாயணிதில்லையம்பதிதனைக்கைதொழச்செல்கோமென்-றெ
ழு டவ்வுரைகொண்டெழினற்றையின்வினையெலாமிரிந்தோடு,மாறு
மன்புடன்சேறலிந்நாளுளதாமெனநியமிதான்,மாலடைந்தவிப்ப
வத்தறியாதுசெய்வல்வினைமாய்ந்தேகும்... ... ...... ......(உ௬)

தொழுதுமென்றெழிவிப்பவத்துமிற்றுசெய்தொடரும்வல்வினைக்
கூட்ட-முழுதுமாய்ந்கறுங்கலையறையாகமமூற்றுமாமெழுத்தஞ்சா,
லெழுதிமேய்ந்தசிற்றம்பலத்தெல்லையைக்காணின்றூன் றெண்ணில்
லாப்-பழுதுகூர்பிறப்பிடையறியாதுசெய்பாவங்கண்மேவாவால்.()

பிறிந்தவல்வினைமாதவகொடுமையிற்பிறங்குமந்தகன்வீழ-வெறி
ந்தமூவிலைப்பரம்பரன்வடிவமாயிலங்குமப்பதிதன்னைச்- செறிந்து
டைந்தபோதலகிலாமுன்னைவெந்தீப்பிறப்புகடோறு - மறிந்துசெ
ய்வினைடறிந்துறுந்தவங்கள்வெறுற்றுவாரறிவென்றே .... ...(உ௮)

பங்கயத்தடங்கண்டபோதந்தனன்பதம்பெறலாற்றிண்டிற்-செங்
கண்மாலரும்பதத்தினையெளிதினிற்சேரலாங்குடங்கையுட்-டங்குநீர்
தமதுட்கொளினுருத்திரன்றக்கவான்பதமெய்தும்-பொங்குமந்தட
மூழ்கினன்மகேசரன்பொற்பதம்புகலாகும்.... ... ... ... (உ௯)

சிந்தையன்புகொடகிலநாயகன்றனைத்திருமூலத்தானத்தான்- வந்
துகண்டவர்சதாசிவபதத்திடைவைகுவர்பொன்மன்றத்-தெந்தையைப்
பிலைகாணநின்றுடியவிருபதங்கண்டோர்க-ளந்தமொன்றிலாமுத்தி
யக்கணத்திடையடைதனிச்சயமாமால்........................ ......(௩௰)

[அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.]

வேறு.

ஈசனுக்குப்பிழைத்தகொடும் பாவமுதற்பாவங்களியற்றுதுள்ள-
நேசமுறச்சைவநூலாய்ந்துணர்ந்துநின்றநிலைநீங்காதென்றும்- பா
சவினைப்பகைசாட வடிவுகொடு சிதம்பரத்துட் பதுமச்செந்தாள்-
வீசியொருபொருளாடல்கண்டுறைந்தோருள்ளரபடிவீடுசேர்வர். ()

அப்பரிசொன்றிலரேனுஞ்சிதம்பரத்துட்சேவடிகண்டவருமந்த-
மெய்ப்பதியிலிருந்துமலர்ச்சேவடிகாணுதநிவன் வீட்டுறுவோரு-

மெப்பதியோ ரெப்பிறப்போ ரெவ்வினையோராயினுமங் கிறந்து
ளோருஞ் - செப்பரியசாலோகமுதன் முத்தியடைந்தடைவிற்சிவத்
ஞதைச்சேர்வர்...... ........................................(௫௨)

அழிவிலாவப்பதியிலிருந்துகொடுவினைபுரிந்தோரடைந்துவீழ
மொழிவிலாநரகத்தைமொழியுமாறெவன்கொலோவுலவாவேத-வழி
யினுணர்முனிவவென்னுமுரைசெவிப்புகலுமயங்கினான - விழியி
னுண்ணீர்பணிந்துசயிப்பினியஞ்சலிசெய்துவிளம்புவானால் ....(௫௩)

முடிவிலாவம்பலத்தினடங்கண்டோர்முத்தரெனமொழிந்தாயந்த
ப்-படிவிடாதாகமவேதங்களெலாமையமறப்பகராநின்ற-நெடியமா
தவர்புகழப்பதியிருந்துவினைபுரிந்தோர்நீங்கொணாத - கொடியமா
நிரயத்தோரென்றவுணாமாறன்றோகூறுங்காலை...... ...... (௫௪)

ஐயமிகவையமெனக்கடைந்தது நீயையமற வருள்செயென்ன -
மெய்புணருமுனிவனுநன் றுனைத்தனைமைந்தாவெவர்க்கும் விளம்
பொணாத வுய்யுநெறியாமிதனைக்கேட்கவிரும்பினைநேசவுள்ளங்கொ
ண்டு-செய்யநெறியுடையநினக்குள்ளபடிமொழிதுமெனச் செப்பு
கின்றான்........................................... (௫௫)

எங்கண்ணுமியாரேனுமியற்றியநல்வினைதீமையிரண்டினுள்ளும்-
பொங்குபயனொன்றொன்றேயழியாதபெருப்பற்றப் புலியூர்தன்னி
ற்-றங்கநெறியாரேனுமறிவுடனுமறியாமைதொடர்ந்துஞ்செய்த-
தங்குபெருநல்வினைதீவினையொன்றுகோடியாய்த்தழைகுமன்றே.

சீதமலர்ப்பொழிற்றில்லையிருந்துதீவினைபுரிந்தோர் தெய்வமன்று
ட்- பாதமலர்கண்டிடனேமுத்தராதலினுனும்பகருமன்றோ - றோது
வினைப்பயனூட்டவுரனிலனென்பதுகொண்டுதண்டஞ்செய்தற்- கா
தியரம்பரன்காலற்கதிகாரமவ்வளவுக்கமைத்தானல்லன் ... ...(௫௭)

அன்னதனுக்கதிகார மப்பதிப்பால்வயிரவனுக்களித்தான்காலன்-
பன்னரியவோரிருபத்தெண்கோடிநரகத்துட்படுமத்தண்ண - றன்
னரியகற்பமெலாம்புரிதண்டம்வ்வடுகன்றயங்குசூலத் - துன்னரிய
துனியிடையோர்கணப்போதிற்படுத்துயருக்கொவ்வாதம்மா (௫௮)

அத்தலத்திலிடைக்கொடியபாதகங்கள்புரிந்தோராயனேகங்கோ
டி-நித்தமுறுகற்பமெலாம்பதிப்பாலன்காதலத்துணிகரிலாத- மூத்
தலையினுனியினருங்கொடியவினைப்பெரும்பயன்கண் முடித்துநீக்க
த் - துய்த்திடுமோறய்த்திடுவன் றுய்க்கும்போதுளதுயரஞ்சொல்ல
ற்பாற்றே..... ........................................ (௫௯)

பந்தமகற்றியதில்லைநகரடைந்துஞ்சிவகங்கைபடிந்துமன்றத்-தி ந்தமிலான்றன்கண்டுமெத்தலத்திற்கொடுவினைகணந்தோவந்தோ-தந் தமதுமன்னறியப்புரிவதேழுடர்களென்சாற்றுகேன்யான்- சிந்தை செயுந்தொறுமுடலந்துளங்குமெனதுளதுகம்பஞ்சேருமன்றே.

செல்லாடல்புரிபொழில்சூழ்தில்லைமாநகரிருந்துதிங்குசெய்தல்- பொல்லாதுபொல்லாதுகல்லாதோரறிபாபொற்புகல்வதென்னே- சொல்லாருமறைமுனிவசிதம்பரங்கண்டிடவிருந்துசுகற்குந்துளங்காதிய ங-வில்லாதுசெலவாயிக்கணந்தன்னிற்கொடியவினைநீத்துவாழ்வாய்

சிலமுறுநடங்கணடங்கிருந்துமனனறியவினைசெய்தோர்தானப்- பாலயிரவன்கரத்துச்சூலநுனியிடைவாதைப்பட்டபின்னர்- கோலமுறுமனைவியர்தம்முதரத்துக்குறுகுவரோருறுகார்வெய்ய- நீலநிற க்காலனடுந்தண்டமுறருடன்சிவத்துணித்தராவர்...... ......(௪௧)

பொங்குமறைச்சயிமினிவதாதனடம்புரிந்தருளப்புரியின் வாழ் வோர் -தங்கண்மனமறியாமல்வந்தகொடுவினைதனக்குத்தக்கசாந்தி- கங்கைமுதலாகியநற்றீர்த்தமெலாம்வணங்குசிவகங்கையென்னு- ம ங்கமலத்தடவாவிமூழ்குதலேமுழ்குநெறியறையக்கேட்டி... (௪௨)

தன்னிகராகியதில்லைத்தலத்துறைவோர்சிவகங்கைதன்னின்மூழ்கி னென்னவிராப்போதகலிலடைந்தகொடுவினையாவு நீங்கியுய்வ- ரன்னியதேயத்துறைவோரன்றடைந்துசிவகங்கையாடப்பெற்றுற்- பன்னுமறைமுனிவர்களும்பெறலரியமோக்ஷபதப்பற்றிவாழ்வார்.

திங்கள்செய்புந்திகுருபுகர்காரிவாரத்துச்சென்றுமூழ்கி - னங்க டைவிறேன்றிரண்டுமூன்றுநான்கைந்தாறெனறலைறந்தநாளிற்- று க்கவினையறுமருக்கவாரத்துச்சுடாருக்கவேறுமூன்னைம்-பொங் குமலர்ச்சிவகங்கைபடியிலெழுநாள்வினைகள்போகுமன்றே. (௪௫)

ஏருலவுவளர்மதியின்முதற்பக்கத்தனக்கொருநாளிரண்டாம்பக்க மோரிருநாண்முற்பக்கமுந்நாண்மற்றையபக்கமொழியினிவ்வா- று ருநிறைபவுரணையினளவறிகுறைமதியினந்தநாளிற்,சீருலவுசிவகங் கைபாடிறொருதிங்கள்வினைதீருமன்றே.... ............ ......(௪௬)

வியன்மதியங்குறைபக்கத்தட்டமிக்குஞ் சதுர்த்தசிக்கு விதிபாத த்துக்- குயர்திங்கட்பிறப்புகளுக்காதிநாட்கொவ்வொன்றுக்கோ ரோர்மாத - மியல்புறுமைப்பசிமாதப்புகுதிக்குமுத்திங்களெழிந் றைபாடியயனமிவைக்காறுதிங்களுருவினையகலுமந்நீராடல்... ()

சித்திரைதிங்கட்புகுநீர்மார்கழியாதிரைமாசித்திருமகத்தின் - மெய்
த்தடத்தின்மூழ்கினுமெலாவ்வொன்றுக்கோராண்டின்வினைகளீக்குந்
தந்தமதெரிஞ்சதியா னுஞ்செய்வினைக்குச்சாந்திரியிலைதலைத்தோய்த்த
னும் - சித்தமதுவலவினைக்குவயிரவன்மூவிலைநுதியிறசேர்வாரன்றே.

சீதமலர்ச்சிவகங்கைசிவனுருவேயென்றோதோர்தெண்ணீரென்னு
ம் - பாதகர்நான்முகன்வாழ்நாளளவுநிரயக்குழியிற்படிவர் நிந்தை-
யோதினர்கள்சிவநிந்தைபுரிந்தவரோபூசனைகளுவந்துசெய்த - லாதி
யனைப்பூசித்தலாமுண்மையறைந்தனம்யாமறிவான்மிக்கோய். (சகூ

